# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2025 – 2026

### மானியக் கோரிக்கை எண். 4

**மருத்துவர் மா. மதிவேந்தன்**
ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2025

# பொருளடக்கம்


| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| | தொலை நோக்குத் திட்டம் | 2 |
| | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்கள் (SCSP & TSP) | 12-17 |
| I | **ஆதிதிராவிடர் நலன்** | |
| 1. | கல்வி நலனுக்கான முன்னெடுப்புகள் | 18-48 |
| 2. | பள்ளிகள் | 49-53 |
| 3. | விடுதிகள் | 53-67 |
| 4. | சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 68 - 74 |
| 5. | தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் | 74-77 |
| 6. | டாக்டர் அம்பேத்கர் விருது | 77-79 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 7. | சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையை சரிபார்த்தல் | 79-80 |
| 8. | வன்கொடுமை தடுப்புச் சட்டம் செயல்படுத்துதல் | 80-88 |
| 9. | மயானம் மற்றும் மயானப் பாதை வசதி ஏற்படுத்தி தருதல் | 88-89 |
| 10. | சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல் | 89-90 |
| 11. | ஈமச்சடங்கு உதவித்தொகை | 90-91 |
| 12. | சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான இதர முன்னெடுப்புகள் | 91-92 |
| II. | **பழங்குடியினர் நலன்** | |
| 1 | கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் | 97-111 |
| 2. | உண்டி உறைவிடப் பள்ளிகள் | 112-115 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 3. | விடுதிகள் | 115-117 |
| 4. | தொழிற்பயிற்சி நிலையங்கள் | 118-119 |
| 5. | தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கான நிதியுதவி | 119-122 |
| 6. | சமூக, பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் | 122-134 |
| 7. | பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006 | 134-137 |
| 8. | பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல் | 137-139 |
| 9. | பழங்குடியினர் ஆய்வு மையம் | 139-142 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| III. | **தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)** | |
| 1. | வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கான முன்னெடுப்புகள் | 144-161 |
| 2. | திறன் மேம்பாட்டு பயிற்சி | 162-177 |
| 3. | தொழிற்பேட்டைகள் புனரமைப்பு | 177-178 |
| 4. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோர் சிறப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் | 178-179 |
| 5. | ஆதி கலைக்கோல் | 179-180 |
| 6. | கட்டுமானப் பிரிவு | 180-183 |
| IV. | **தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்** | 184-185 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| V. | **நலக் குழுக்கள்** | |
| | தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் | 186-187 |
| VI. | **நல வாரியங்கள்** | |
| 1. | தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் | 188-189 |
| 2. | தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் | 189-193 |
| 3. | தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் | 193-194 |
| 4. | தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் | 195-196 |
| VII. | **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2025-2026-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு** | 197 |

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2025-2026

### முன்னுரை

**கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு**
**உரிமை உடைத்திவ் வுலகு. (குறள் 578)**

மக்களுக்கான நிர்வாகக் கடமையினை கருணையோடு செய்யும் அரசுக்கு இவ்வுலகமே உரித்தாகும் என்ற வான்புகழ் வள்ளுவரின் குறளுக்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்கி வரும் இவ்வரசு, சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை கருணையோடு அரவணைத்து அனைத்து நிலைகளிலும் உயர்வடையச் செய்து சமூக நீரோட்டத்தில் ஒன்றிணைப்பதற்கான செயல் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

## தொலை நோக்குத் திட்டம்

- 2030 ஆம் ஆண்டிற்குள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் குறிப்பாக, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் நலன் தொடர்பான ஒருங்கிணைந்த வளர்ச்சி இலக்கினை எட்டுதல்.

- கல்வி மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்துவதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் கல்வி, தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைத்திறன் போன்ற செயல்திறன்களை உயர்த்துதல்.

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனில் கவனம் செலுத்துவதன் மூலம் சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களை சமூக நீரோட்டத்திற்குள் கொண்டு வருதல்.

ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கில் ஒன்றான

2030 ஆம் ஆண்டுக்குள், இனம், தோற்றம், மதம், பொருளாதார நிலை போன்ற வேறுபாடுகளின்றி, கல்வி, சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்கி அனைத்து மக்களையும் உயர்வடையச் செய்வதற்கான திட்டங்களை இயற்றி அரசு முனைப்பாக செயல்படுத்துகிறது.

## நிருவாக அமைப்பு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை கல்வியறிவு மற்றும் சமூக, பொருளாதார நிலைகளில் உயர்த்தி, அவர்களது வாழ்க்கைத் தரத்தினை சமூகத்தின் இதர பிரிவினருக்கு இணையாக மேம்படுத்தும் நோக்கத்துடன் தனித்துவமான திட்டங்களை உருவாக்க 1988-ஆம் ஆண்டில் சமூக நலத்துறையிலிருந்து பிரிக்கப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை எனும் தனித்துறையாக தோற்றுவிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் உருவாக்கப்படும் திட்டங்களை செயல்படுத்துவற்கு, ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், பழங்குடியினர் நல இயக்குநரகம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு மற்றும் சமூக நீதி மற்றும் சமத்துவ மையம் ஆகிய துறைத் தலைமை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

ஆதிதிராவிடர் மாணாக்கரின் கல்வி மேம்பாட்டிற்காக பள்ளிகள் மற்றும் விடுதிகள் தோற்றுவித்து நடத்துதல், கல்வி உதவித்தொகை திட்டங்களான ப்ரி மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை, வெளிநாடுகளில் உயர் கல்வி

பயில்வோருக்கான கல்வி உதவி போன்ற திட்டங்களை செயல்படுத்துதல், ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், வீட்டுமனை பட்டா வழங்குதல், சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் சமூக நல்லிணக்கத்தை உறுதிபடுத்துதல் போன்ற பணிகளை ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் மேற்கொண்டு வருகிறது.

பழங்குடியினரின் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டினை உயர்த்திடும் நோக்கில் உண்டி உறைவிடப் பள்ளிகள், ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், கல்வி உதவித் தொகை வழங்குதல், விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள், வன உரிமைச் சட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் தொல்குடி திட்டத்தின் கீழ் குடியிருப்புகள் மற்றும் அடிப்படை

உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல், ஐந்திணை வேளாண்மை மேலாண்மை திட்டம், பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்குதல் போன்ற பணிகளை பழங்குடியினர் நல இயக்குநரகம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, பொருளாதார மேம்பாடு அடையச் செய்யும் நோக்குடன் மானியத்துடன் கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல், இளைஞர்கள் சுய தொழில் துவங்கிடவும், வேலைவாய்ப்புக்கான திறன் பெற்றிடவும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், விடுதிகள், சமுதாயக் கூடங்கள்

கட்டுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆராய்ச்சி படிப்புகள் மற்றும் சான்றளிக்கப்பட்ட பாடப்பிரிவுகள் நடத்தி, அதன் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூக நீதி மற்றும் சமத்துவம் சார்ந்த சிந்தனைகளை வளர்க்க சென்னை சமூகப்பணி பள்ளியில் சமூக நீதி மற்றும் சமத்துவ மையம் தொடங்கப்பட்டுள்ளது. இம்மையம் சமூக நீதி மற்றும் சமத்துவம் சார்ந்த தரவுகளை சேகரித்தல், மாநாடுகள், கருத்தரங்குகள் நடத்துதல் மற்றும் ஆராய்ச்சி படைப்புகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989, திருத்தச் சட்டம், 2015 ஆகிய சட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் ஆதிதிராவிடர்

மற்றும் பழங்குடியினருக்கு எதிரான குற்றச்செயல்களை தடுத்து, அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் பணியினை காவல் துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு மேற்கொண்டு வருகிறது. இச்சட்டத்தின் செயலாக்கத்தினை மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கண்காணித்து வருகிறது.

தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடியின மக்களின் மொழி மற்றும் கலாச்சாரம் குறித்த ஆராய்ச்சியினை மேற்கொள்ளவும், தரவுகளை சேகரிக்கவும், பழங்குடியினர் நலன் சார்ந்த பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும் பணியினை நீலகிரி மாவட்டத்திலுள்ள பழங்குடியினர் ஆய்வு மையம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்

13.10.2021 அன்று தோற்றுவிக்கப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்திடவும், அவர்களது முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

பழங்குடியின மக்களின் தேவைகளை கண்டறிந்து புதிய திட்டங்களை உருவாக்கவும், அரசுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கிடவும் தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் 04.09.1961 அன்று உருவாக்கப்பட்டது. இம்மன்றம் 30.11.2023 அன்று மறுசீரமைப்பு செய்யப்பட்டு பழங்குடியினரின் நலத்திட்டங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

பழங்குடியின மக்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் நலத்திட்ட உதவிகளை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் 20.04.2007

அன்று தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியம் 08.09.2023-இல் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் 11.06.2007 அன்று தோற்றுவிக்கப்பட்டு, தூய்மைப் பணிபுரிவோருக்கான நலத் திட்டங்களை செயல்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருகிறது. இவ்வாரியம் 03.05.2023-இல் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் 27.05.2008 அன்று தோற்றுவிக்கப்பட்டு நரிக்குறவர்களுக்கு கல்வி மற்றும் இதர உதவித்தொகைகள், மற்றும் மாற்றுத் தொழில் புரிவதற்கான நிதியுதவி வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. இவ்வாரியம், 30.10.2023 அன்று மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் 15.10.2009 அன்று தோற்றுவிக்கப்பட்டு புதிரை வண்ணார் மக்களுக்கான நலத்திட்டங்களை செய்து வருகிறது. இவ்வாரியம், 03.08.2023 அன்று மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திடும் பொருட்டு, 2025–2026-ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ரூ.3924.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்கள் (SCSP & TSP)

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை**

வளங்களை பகிர்ந்து அனைத்து மக்களுக்கும் வழங்கி வாழும் சமநிலை கொள்கைக்கு ஈடான அறம் ஏதுமில்லை என்ற பொய்யாமொழி புலவரின் குறளுக்கிணங்க, மாநிலத்தின் மொத்த வரவு செலவு நிதி ஒதுக்கீட்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொகைக்கு ஏற்ப நலத்திட்டங்களை செயல்டுத்தும் பொருட்டு விகிதாச்சார அடிப்படையில் நிதிஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக - பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சியினை உயர்த்திடும் நோக்குடன் 1976-1977-ஆம் ஆண்டு முதல் பழங்குடியினர்

துணைத் திட்டமும், 1980-1981-ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிடர் துணைத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அரசுத் துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிதி ஒதுக்கீடு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் மக்கள் தொகைக்கேற்ப 20.01 சதவீதம் மற்றும் 1.17 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டம் செவ்வனே செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய 29.05.2024 அன்று தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல் திட்ட சட்டம், 2024 (தமிழ்நாடு அரசு சட்டம் 20/2024) இயற்றப்பட்டு உள்ளது.

இச்சட்டத்தின் மூலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டு

செயல் திட்டத்தை தயாரித்தல், ஒப்புதல் அளித்தல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல், மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப நிதியை கணக்கிட்டு ஒதுக்கீடு செய்வதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களை செயல்படுத்துவதை கண்காணிக்கும் முகமைத் துறையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் இத்துறையின் செயலாளர் கண்காணிப்பு அலுவலராக செயல்படுகிறார்.

2023-2024-ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.77,930.30 கோடியில், ஆதிதிராவிடர் துணைத்

திட்டத்திற்காக ரூ.17,105.70 கோடி (21.95%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1,565.89 கோடி (2.01%) நிதி ஒதுக்கீட்டில், ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தில் ரூ.16827.22 கோடி (98.37%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தில் ரூ.1520.35 கோடி (97.09%) செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2024-2025-ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.88,130.83 கோடியில், ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்காக ரூ.19363.56 கோடி (21.97%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1738.40 கோடி (1.97%) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தொடர் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2025-2026-ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டு நலத்திட்ட ஒதுக்கீடான ரூ.92,691.64 கோடியில், ஆதிதிராவிடர் துணைத்

திட்டத்திற்காக ரூ.20,365.64 கோடி (21.97%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1,879.09 கோடி (2.03%) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2025-2026 ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் துறை சார்ந்த (SECTORAL) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம்

(ரூ. கோடியில்)

| வ. எண். | பிரிவு | ஆதிதிராவிடர் துணைத் திட்டம் | பழங்குடியினர் துணைத் திட்டம் |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 3420.73 | 687.80 |
| 2 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி | 1122.44 | 125.38 |
| 3 | ஊரக வளர்ச்சி | 1871.14 | 242.67 |

(ரூ. கோடியில்)

| வ. எண். | பிரிவு | ஆதிதிராவிடர் துணைத் திட்டம் | பழங்குடியினர் துணைத் திட்டம் |
|---|---|---|---|
| 4 | சமூகநலன் மற்றும் சத்துணவு | 7006.74 | 438.20 |
| 5 | குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு | 522.47 | 21.75 |
| 6 | வேளாண்மையும் தொடர்பான நடவடிக்கைகளும் | 981.15 | 64.97 |
| 7 | கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாடு | 1479.51 | 197.46 |
| 8 | மக்கள் நல்வாழ்வு – குடும்பநலன் | 926.66 | 70.35 |
| 9 | போக்குவரத்து | 230.24 | - |
| 10 | பொதுவான பொருளாதாரப் பணிகள் | 2422.29 | 4.89 |
| 11 | தொழிலாளரும் தொழிலாளர் நலனும் | 77.69 | 8.76 |
| 12 | சிறப்பு பகுதித்திட்டங்கள் | 30.44 | 7.42 |
| 13 | தொழிலும் கனிமங்களும் | 259.25 | 2.87 |
| 14 | ஏனைய சமூகப்பணிகள் | 14.89 | 6.57 |
| **மொத்தம்** | | **20365.64** | **1879.09** |

# I. ஆதிதிராவிடர் நலன்

ஆதிதிராவிடர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி சமூக நீரோட்டத்தில் ஒருங்கிணைக்கும் வண்ணமாக கல்வி, திறன் மேம்பாடு, வீட்டுவசதி, உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் சுகாதாரம் போன்ற திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்காக ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் இயங்கி வருகிறது.

## 1. கல்வி நலனுக்கான முன்னெடுப்புகள்

“கல்வி ஒருவருக்கு தன்னம்பிக்கையையும், ஒற்றுமையையும், உரிமைகளை பற்றிய விழிப்புணர்வையும், அதனை நிலைநாட்ட தூண்டுகோலாகவும் அமைகிறது” என்ற அண்ணல் அம்பேத்கரின் கூற்றுக்கிணங்க, சமத்துவ சமுதாயத்தை நிலைநாட்டவும், ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமைகளை மீட்டெடுக்கவும், கல்வியினால் மட்டுமே முடியும்

என்ற நம்பிக்கை கொண்டு, கல்வி முன்னேற்றத்திற்காக பல்வேறு முன்னெடுப்புகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 28,85,168 ஆதிதிராவிட மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர். (ஆதாரம் - ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முகமை)

2025–2026-ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவு திட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறைக்கு மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.3231.92 கோடியில், கல்வி சார்ந்த செயல்பாடுகளுக்காக ரூ.2439.48 கோடி (75.48 %) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாணாக்கருக்கு உயர்கல்வி வரையில் கல்வி உதவித் தொகை, கற்பிப்பு கட்டணம்,

தேர்வுக் கட்டணங்களிலிருந்து விலக்கு, விலையில்லா கல்வி உபகரணங்கள் வழங்குதல் போன்ற நலத்திட்டங்களால் பல இலட்சம் ஆதிதிராவிடர் மாணாக்கர் பயன்பெற்று வருகின்றனர்.

### 1.1. கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

#### அ) அயல்நாடு சென்று உயர்கல்வி பயில உதவித்தொகை

வெளிநாடுகளில் உள்ள சிறந்த கல்வி நிறுவனங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர் முதுகலைப் பட்டம் மற்றும் முனைவர் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் அயல்நாடு சென்று உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தகுதி பெறும் மாணாக்கரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.8.00 இலட்சத்திற்குள் இருப்பின் அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.36.00 இலட்சமும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12.00 இலட்சத்திற்குள் இருப்பின் அதிகபட்சமாக ரூ.24.00 இலட்சமும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

மாணாக்கர் சேர்க்கை பெறும் பல்கலைக் கழகங்கள் உலகத் தரவரிசையில் QS (Quacquarelli Symonds) முதல் 1000 இடங்களுக்குள் இருத்தல் வேண்டும்.

கல்வி உதவித்தொகை திட்டத்தின் மூலம் 2024-25ஆம் கல்வியாண்டில் உலக தரவரிசையில் இடம் பெற்றுள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், கார்னெல் பல்கலைக்கழகம், லண்டன் ஸ்கூல் ஆஃப் ஹைஜீன் அண்ட் டிராபிகல் மெடிசின், ஏடன்பர்க் பல்கலைக்கழகம்,

பிரிஸ்டல் பல்கலைக்கழகம் போன்ற புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயின்று வருகின்றனர்.

2024-2025–ஆம் நிதியாண்டில் 115 மாணவர்கள், 59 மாணவிகள் என மொத்தம் 174 மாணாக்கருக்கு ரூ.60.33 கோடி மதிப்பில் இவ்வுதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை 2025-2026-ஆம் நிதியாண்டில் **அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டம்** என பெயர் மாற்றம் செய்து ரூ.65.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) **முழு நேர முனைவர் ஆராய்ச்சி படிப்பிற்கான ஊக்கத்தொகை**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர் ஆராய்ச்சி மேற்கொள்ள ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டம் முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்புகளில் ஈடுபடும் மாணாக்கரை பொருளாதார ரீதியாக ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், இதற்கான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.8.00 இலட்சமாக 2021-ஆம் ஆண்டு முதல் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மொழிப்பாடங்கள், கலை மற்றும் அறிவியல் பாடங்கள் மட்டுமின்றி வேளாண் வானிலை ஆய்வு, கட்டமைப்பு பொறியியல், VLSI வடிவமைப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் (Agri Meteorology, Structural engineering, VLSI (Very Large Scale Integration design, Renewable Energy, Nano Science and Technology, Agronomy and Environmental Science) போன்ற தற்காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதும்

பாடப்பிரிவுகளில் முனைவர் ஆராய்ச்சி படிப்பு பயின்று வருகின்றனர்.

முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்புகளில் மாணாக்கர் கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில் 1600 மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை தற்போது 2000 மாணாக்கர் பயன்பெறும் வகையில் எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பாடப்பிரிவுக்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில், தேர்வு செய்யப்பட்ட மாணாக்கருக்கு ஆண்டுக்கு ரூ.1.00 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பாடப்பிரிவுகள் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | மொழியியல் (Linguistics) | 10% |
| | கலை (Education, Commerce, Management, Architecture, Mass Communication, Design) | 20% |

| வ. எண் | பாடப்பிரிவுகள் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 2. | அறிவியல் (Pure Science) | 20% |
| | பயன்பாட்டு அறிவியல் (Applied Science, Medical, Engineering) | 40% |
| 3. | கலம் 1 மற்றும் 2-இல் இடம்பெறாத பாடப்பிரிவுகள் | 10% |

2024-2025-ஆம் நிதியாண்டில் 848 மாணவர்கள், 1107 மாணவிகள் மற்றும் 1 மூன்றாம் பாலினத்தவர் ஆக மொத்தம் 1956 மாணாக்கருக்கு ரூ.19.56 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.2 கல்வி உதவித்தொகை திட்டங்கள்

### (அ) பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளுக்கான (போஸ்ட் மெட்ரிக்) கல்வி உதவித்தொகை திட்டம்

உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் நோக்குடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில், பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மாணாக்கருக்கு கல்விக் கட்டணங்கள் மற்றும் கல்விப்படி கல்வி உதவித்தொகையாக மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான செலவினம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம்

ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(i) **கல்விக் கட்டணங்கள்**

அரசு / அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கருக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கல்வி கட்டணங்களும், சுயநிதிக் கல்லூரிகளில் அரசு / நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் மாணாக்கருக்கு கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டணங்களும் (Compulsory and Non-refundable Fees) கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

### (ii) கல்விப்படி (Academic Allowance)

| பிரிவு | படிப்புகள் | ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | இளங்கலை மற்றும் முதுகலை தொழில்முறை பட்டப்படிப்புகள் | 13,500/- | 7,000/- |
| II | பட்டம் மற்றும் டிப்ளமோ படிப்புகளுக்கு வழிவகுக்கும் பிற தொழில்முறை படிப்புகள் | 9,500/- | 6,500/- |
| III | தொகுதி I மற்றும் II-ல் இடம்பெறாத இதர இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் | 6,000/- | 3,000/- |

| பிரிவு | படிப்புகள் | ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| IV | அனைத்து மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் பட்டப்படிப்பு அல்லாத பட்டய படிப்புகள் | 4,000/- | 2,500/- |

இத்திட்டத்தின் கீழ், 2024-2025-ஆம் நிதியாண்டில் 7,24,197 மாணாக்கருக்கு ரூ.508.38 கோடி கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் மாநில அரசின் 40 விழுக்காடு பங்கு தொகை ரூ.578.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) பத்தாம் வகுப்பு வரையிலான படிப்புகளுக்கான (ப்ரி–மெட்ரிக்) கல்வி உதவித்தொகைத் திட்டம்**

பள்ளி மாணாக்கர் பொருளாதார தடையின்றி கல்வி பயில உதவிடும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், ஒன்றிய, மாநில அரசுகளால் முறையே 60:40 என்ற விகிதத்தில் செலவினங்களை பகிர்ந்துகொண்டு, 2021-2022-ஆம் நிதியாண்டு முதல் பின்வரும் இரண்டு திட்டக் கூறுகள் அடங்கிய ஒரே திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது:-

## திட்டக்கூறு - 1

## ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கருக்கான (ப்ரி-மெட்ரிக்) கல்வி உதவித்தொகை திட்டம்

மாணாக்கரின் கல்வி இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் உள்ள ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கருக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. பெற்றோர் அல்லது பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2024-2025-ஆம் நிதியாண்டில் 3,71,928 மாணாக்கருக்கு ரூ.52.06 கோடி கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2025-2026-ஆம் நிதியாண்டில், ரூ.51.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திட்டக்கூறு - 2**

**பத்தாம் வகுப்பு வரை பயிலும், தூய்மைப் பணி மற்றும் அதற்கு இணையான பணிகளில் ஈடுபட்டுள்ளோரின் குழந்தைகளுக்கான (ப்ரி மெட்ரிக்) கல்வி உதவித்தொகை திட்டம்**

தூய்மைப் பணி மற்றும் அதற்கு இணையான பணிகளில் ஈடுபட்டுள்ளோருக்கு சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்புள்ளதால் அத்தகைய பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு, சாதி, மத வேறுபாடு மற்றும் வருமான வரம்பின்றி இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர் இக்கல்வி உதவித்தொகை பெறுவர்.

இத்திட்டத்தின் கீழ், 2024-2025-ஆம் நிதியாண்டில் 49,024 மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.6.86 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.5.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விரண்டு திட்டக்கூறுகளின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை விவரம்

| திட்டக் கூறு | மாணாக்கர் (Day Scholar) | விடுதி மாணாக்கர் (Hosteller) |
|---|---|---|
| | ( ஒரு ஆண்டுக்கு) (ரூபாய்) | |
| திட்டக்கூறு -1 | 3,500/- (வகுப்பு 9-10) | 7,000/- (வகுப்பு 9-10) |
| திட்டக்கூறு -2 | 3,500/- (வகுப்பு 1-10) | 8,000/- (வகுப்பு 3-10) |

**(இ) பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளுக்கான மாநில அரசின் சிறப்பு (போஸ்ட் மெட்ரிக்) கல்வி உதவித்தொகைத் திட்டம்**

ஒன்றிய அரசின் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளுக்கான (போஸ்ட் மெட்ரிக்) கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற இயலாத ஆதிதிராவிடர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர் பயன்பெறும் வகையில், அவ்வுதவித் தொகைக்கு இணையாக கல்வி உதவித்தொகை வழங்க மாநில அரசின் சிறப்பு (போஸ்ட் மெட்ரிக்) கல்வி உதவித்தொகை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கல்வி உதவித்தொகை, மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், 2024-2025-ஆம் நிதியாண்டில் 18,029 மாணாக்கருக்கு ரூ.75.48 கோடி கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில், ரூ.87.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை திட்டம்

மாணவர்கள் கல்வி பயில கல்வி உதவித்தொகைகள் வழங்கப்படுவதோடு, அரசு/அரசு உதவி பெறும் கல்லூரிகளின் கட்டண விடுதிகளில் தங்கி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கரின் விடுதி செலவினத்தை

ஈடுசெய்வதற்காக கூடுதலாக சிறப்பு உதவித்தொகைகள் கீழ்க்கண்டவாறு மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

| வ. எண். | படிப்புகள் | உதவித் தொகை (ஓர் ஆண்டுக்கு) |
|---|---|---|
| 1 | இளநிலை பட்ட மற்றும் பட்டய படிப்புகள் | ரூ.7,500/- |
| 2 | முதுநிலை பட்ட, பட்டய படிப்புகள் மற்றும் இளநிலை / முதுநிலை தொழிற் படிப்புகள் | ரூ.8,000/- |

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், 2024-2025-ஆம் நிதியாண்டில் 13,830 மாணாக்கருக்கு ரூ.10.50கோடி கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில், ரூ.12.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(உ) கல்விக் கட்டணச் சலுகைகள்**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயின்று வரும் ஆதிதிராவிடர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கருக்கு வருமான உச்ச வரம்பின்றி பின்வரும் கல்விக் கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(அ) கல்லூரி மாணாக்கருக்கான கற்பிப்புக் கட்டணச் சலுகை (Tuition fee)

(ஆ) இளங்கலை மாணாக்கருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகை (Special fee and Exam fee)

(இ) முதுகலை மாணவியருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகை (Special fee and Exam fee)

(ஈ) கல்லூரி மாணாக்கருக்கான விண்ணப்பக் கட்டணச் சலுகை (Application fee)

(உ) ஆதிதிராவிடர் பள்ளி மாணாக்கருக்கு சிறப்புக் கட்டணச் சலுகை (Special fee)

(ஊ) 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கருக்கான பொதுத் தேர்வுக் கட்டணச் சலுகை (Exam fee)

இத்திட்டத்தின் கீழ், 2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.26.47 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில், ரூ.21.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஊ) பெண் கல்வி சிறப்பு ஊக்கத்தொகை திட்டம்**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவியர் இடைநிற்றலின்றி கல்வி பயில்வதை ஊக்குவிக்கவும், 100 விழுக்காடு சேர்க்கையை உறுதி செய்வதற்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மாணவியருக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை பின்வருமாறு:

| **வகுப்பு** | **தொகை (ஆண்டொன்றுக்கு) (ரூபாயில்)** |
|---|---|
| 3 முதல் 5 வரை | 500/- |
| 6 | 1,000/- |
| 7 மற்றும் 8 | 1,500/- |

கல்வி மேலாண்மை தகவல் அமைப்பு (EMIS) இணையதளம் மூலம் மாணவிகளின்

விவரங்கள் பெறப்பட்டு, மாணவிகளுக்கு நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் ஊக்கத்தொகை செலுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்காக, 2024-2025-ஆம் நிதியாண்டில் 4,77,624 மாணவிகளுக்கு ரூ.47.42கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.52.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(எ) உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்விச் சுற்றுலா**

உயர்கல்வி பயில்வதற்கான ஆர்வத்தை தூண்டும் வகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரை உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல ஒரு பள்ளிக்கு ரூ.25,000/- வீதம் 206 உயர்நிலை

மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.51.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஏ) பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்**

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 1 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர், கிறித்துவ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு பொருளாதார சுமையினைக் குறைத்திடும் வகையில் பாடப்புத்தகங்களும், 1 முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு குறிப்பேடுகளும் பள்ளிக்கல்வித் துறை மூலமாக வழங்கப்படுகின்றன.

2024-2025-ஆம் நிதியாண்டில், இத்துறையின்கீழ் செயல்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் 10-ஆம் வகுப்பில் பயிலும் 17,037 மாணாக்கருக்கும் மற்றும் 12-ஆம் வகுப்பில் பயிலும் 14,497 மாணாக்கருக்கும் ரூ.3.60 கோடி செலவில் சிறப்பு வழிகாட்டி கையேடுகள் மற்றும் வினா வங்கி கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.1.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஐ) சீருடைகள் வழங்குதல்**

இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு பள்ளிக்கல்வித்துறை வழியாகவும், 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு

வரை பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் இத்துறை மூலம் வழங்கப்படுகின்றன.

2024-2025-ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.22.29 கோடி செலவில் 28,655 மாணவர்களுக்கும் மற்றும் 21,029 மாணவியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.14.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஒ) மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்**

அரசு, அரசு உதவிபெறும் மற்றும் பகுதி உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பில் பயின்றுவரும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர் குறித்த நேரத்தில் பள்ளிகளுக்கு

வசதியாக செல்வதற்கு உதவிடும் நோக்குடன் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2024-2025-ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.75.15 கோடி செலவில் 72,350 மாணவர்களுக்கும் மற்றும் 89,249 மாணவியர்களுக்கும் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.80.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஓ) சட்டப்படிப்பு பயிலும் மாணாக்கருக்கு உட்பயிற்சி உதவித்தொகை**

அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்று வரும் மாணாக்கருக்கு சிறந்த சட்ட நிறுவனங்கள் / வழக்கறிஞர்களிடம் பாடத் திட்டத்திற்கேற்ப உட்பயிற்சி (Internship) பெறுவதற்கு உதவித்தொகையாக ரூ.10,000/-

வழங்கப்படுகிறது. மேலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதியரசர்களிடம் உட்பயிற்சி பெறும் மாணாக்கருக்கு தலா ரூ.10,000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

2024-2025-ஆம் நிதியாண்டில் உட்பயிற்சி உதவித்தொகையாக ரூ.10,000/– வீதம் 774 மாணாக்கருக்கு ரூ.77.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில், ரூ.93.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஔ) உயர் திறன் ஊக்கத் தொகை திட்டம்**

பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழில்நுட்ப படிப்புகளில் 60 விழுக்காடு அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று

தேர்ச்சி பெறும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர் தங்களது வேலைவாய்ப்பு திறன்களை வளர்ப்பதை ஊக்குவிக்கும் வகையில் அதிகபட்சமாக ரூ.25,000/- திறன் பயிற்சிக்கான பண உறுதி ஆவணம் வழங்கப்படுகிறது.

2024-2025-ஆம் நிதியாண்டில், 164 மாணாக்கருக்கு ரூ.41.00 இலட்சம் மதிப்பிலான திறன் பயிற்சிக்கான பண உறுதி ஆவணம் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில், ரூ.41.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(க) இதர முன்னெடுப்புகள்**

- பள்ளி இறுதியாண்டு பயிலும் மாணாக்கர் தங்களது உயர்கல்வி பயில்வதற்கான வழிகாட்டுதல் மற்றும் ஒன்றிய மற்றும்

மாநில உயர்கல்வி நிறுவனங்களுக்கான நுழைவுத் தேர்வுகள் பற்றிய விழிப்புணர்வு வழங்குவது குறித்து "**என் கல்லூரிக் கனவு**" எனும் வழிகாட்டு ஆலோசனை முகாம்கள் நடத்தப்பட்டது. இதில், 2023-2024 ஆம் கல்வியாண்டில் 21,000 மாணாக்கர்களும், 2024-2025 ஆம் கல்வியாண்டில் 21741 மாணாக்கர்களும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

- CUET / NEET / JEE / NIFT போன்ற தேர்வுகள் எழுதுவது குறித்து Career Fair என்ற முகாம் 2024-2025-ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களில் நடத்தப்பட்டு, 4863 மாணாக்கர் பங்கேற்று பயன் பெற்றனர்.
- எனக்கு ஒரு கனவு இருக்கிறது! (I HAVE A DREAM) என்ற கலை மற்றும் தலைமைத்துவ பயிற்சி முகாம் 8 மற்றும் 9-ம் வகுப்பு பயிலும் 150 மாணாக்கருக்கு

26.12.2024 முதல் 30.12.2024 வரை சென்னை, அம்பத்தூரில் நடைபெற்றது

- CLAT சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வுக்கான இணையவழி பயிற்சி 12 ஆம் வகுப்பு கலைப்பிரிவு மாணாக்கருக்கு 98 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் நடத்தப்பட்டது. சிறப்பாக பயிற்சி பெற்ற 100 மாணாக்கருக்கு சென்னை மற்றும் திருச்சியில் நேரடி பயிற்சி அளிக்கப்பட்டு, 8 மாணாக்கர் கலந்தாய்வுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- JEE நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் 98 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் நடத்தப்பட்டு, 441 மாணாக்கர் பயிற்சி பெற்று வருகின்றனர்.
- NEET தேர்வுக்கான இணையவழி மற்றும் நேரடி பயிற்சி வகுப்புகள் மூலம் 632 மாணாக்கர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

2. பள்ளிகள்

**சமூகத்தின் முன்னேற்றம் அச்சமூகத்தின் கல்வி முன்னேற்றத்தை பொறுத்ததே!**

என்ற அண்ணல் அம்பேத்கரின் கருத்திற்கிணங்க, சமூகத்தில் மாற்றமும் முன்னேற்றமும், அச்சமூகத்தின் கல்வியின் முன்னேற்றத்தின் மூலமே ஏற்படுத்த முடியும் என்பதை உணர்ந்து பல்வேறு கல்வி மேம்பாட்டு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

மாணாக்கருக்கு சிறந்த கல்வியை வழங்கி கல்வியறிவு விகிதத்தை உயர்த்தும் வகையில் 1,138 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

ஆதிதிராவிடர் அதிகமாக வசிக்கும் பகுதியில் நவீன உட்கட்டமைப்புடன் கூடிய பள்ளிகள் உருவாக்கப்பட்டு அரசால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இம்மாணாக்கருக்கு, மேற்காணும் நலத்திட்டங்கள் மூலம் கல்வி எவ்வித தடையுமின்றி வழங்குவதை இவ்வரசு உறுதி செய்கிறது.

**ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளின் விவரம் 2024-2025**

| பள்ளிகள் வகைப்பாடு | எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 833 | 15,168 | 15,561 | 30,729 |
| நடுநிலைப் பள்ளிகள் | 99 | 4,274 | 4,298 | 8,572 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 108 | 5,458 | 5,029 | 10,487 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 98 | 14,448 | 13,147 | 27,595 |
| **மொத்தம்** | **1,138** | **39,348** | **38,035** | **77,383** |

- பள்ளிகளில் நூலகங்கள், வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், அறிவுத்திறன் வகுப்பறைகள், மற்றும் திறன் பலகைகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள், விளையாட்டு உபகரணங்கள், சமையலறைகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- கல்வித்தரத்தை உயர்த்திட ஆசிரியர்களுக்கு நவீன கற்பித்தல் உத்திகள், கணினி தொழில்நுட்பம், மொழியாற்றல் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள்**

- 119 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறைகள் (Smart Class Room) மற்றும் 174 பள்ளிகளில் அறிவுத்திறன் பலகைகள் (Smart Board) அமைக்கப்பட்டுள்ளன. 206 பள்ளிகளில்

உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (High Tech Lab) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- 154 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 480 புதிய வகுப்பறைகள் மற்றும் 15 அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 2024-2025 ஆம் நிதியாண்டில் 107 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 256 வகுப்பறைகள், 42 கழிவறைகள், 21 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 65 மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வகங்கள் ரூ.125.00 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன.

## 2.1 ஆசிரியர்களுக்கான புத்தாக்கப்பயிற்சி

- முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான பாடத்திட்டம் மற்றும் புத்தாக்கப்பயிற்சி மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள் மூலமாக மதுரை, சேலம்

மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் வழங்கப்பட்டது.

- மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் வழங்குவது குறித்து 19.08.2024 அன்று மதுரையில் அனைத்து மேல்நிலைப்பள்ளி முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.
- "புதியதோர் உலகு செய்" என்ற பெயரில் அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு 20.11.2024 மற்றும் 21.11.2024 ஆகிய இரண்டு நாட்களில் கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டியில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 3. விடுதிகள்

தொலைதூர கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணாக்கர் இடைநிற்றலின்றி தங்களது கல்வியினை தொடர்ந்திடும் வகையில்

மாணாக்கர் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகில் நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் நடத்தப்படுகின்றன.

இத்துறையின் கீழ் இயங்கி வரும் ஆதிதிராவிடர் நல விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:-

**ஆதிதிராவிடர் நல விடுதிகளின் விவரம்**

(2024-2025)

| விடுதியின் வகை | விடுதிகளின் எண்ணிக்கை | | | அனுமதிக்கப்பட்ட மாணாக்கரின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| பள்ளி விடுதிகள் | 738 | 403 | 1,141 | 53,881 | 28,530 | 82,411 |
| கல்லூரி விடுதிகள் | 71 | 81 | 152 | 7,881 | 5,849 | 13,730 |
| ஐ.டி.ஐ. விடுதிகள் | 16 | 2 | 18 | 1,356 | 116 | 1,472 |

| விடுதியின் வகை | விடுதிகளின் எண்ணிக்கை | | | அனுமதிக்கப்பட்ட மாணாக்கரின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| பாலிடெக்னிக் விடுதிகள் | 3 | 2 | 5 | 178 | 110 | 288 |
| முதுகலைப் பட்டதாரி கல்லூரி விடுதிகள் | 9 | 6 | 15 | 693 | 315 | 1,008 |
| மொத்தம் | 837 | 494 | 1,331 | 63,989 | 34,920 | 98,909 |

- தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள காபி / தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தேனி மாவட்டத்தில் உள்ள 16 விடுதிகளில் தலா 10 இடங்கள் (மொத்த இடங்கள் 160) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக, கூடுதலாக ஐந்து இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 3.1 விடுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெடுப்புகள்

### அ. விடுதி உட்கட்டமைப்பு

- எம்.சி.ராஜா மாணவர் விடுதி வளாகத்தில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் 10 தளங்களுடன் 484 மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய விடுதி கட்டப்பட்டுள்ளது.

- ரூ.37.95 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை, ஈரோடு, கடலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

- ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் விடுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 535 விடுதிகளில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஆ. கற்றல் கற்பித்தல் அறைகள்**

கல்லூரி விடுதிகளில் பயிலும் மாணாக்கருக்கு ஆளுமைத்திறனை மேம்படுத்துவதற்கு ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 17 மாவட்டங்களில் உள்ள 22 விடுதிகளில் 2197 மாணாக்கர் பயன்பெறும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய கற்றல் கற்பித்தல் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**இ. பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள்**

திருவள்ளூர், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கு விடுதிகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## ஈ. விடுதி மேலாண்மை அமைப்பு

விடுதிகளை சீரான முறையில் பராமரித்து, மாணாக்கர் கல்வி பயில நல்ல சூழலை உருவாக்கும் வகையில், பராமரிப்புப் பணிகள், கண்காணிப்பு கேமரா மற்றும் பயோமெட்ரிக் வருகைப் பதிவுடன் கூடிய விடுதி மேலாண்மை அமைப்பு 1275 விடுதிகளில் ரூ.27.15 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

## உ. ஒருங்கிணைந்த சமையற்கூடம்

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு தரமான மற்றும் சுவையான உணவினை வழங்கும் பொருட்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை பின்பற்றி ஒருங்கிணைந்த சமையற்கூடம் மூலம் உணவு வழங்கும் திட்டம் சென்னையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சென்னை நகரில் உள்ள

21 விடுதிகளில் தங்கிப்பயிலும் சுமார் 2500 மாணாக்கர் பயனடைந்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக, கோவை, மதுரை மற்றும் திருச்சி நகரங்களுக்கு ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் 3000 மாணாக்கர் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படவுள்ளது.

**ஊ. வரவேற்பு பெட்டகம்** (Welcome Kit)

பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் மாணாக்கரின் தேவைகளை நிறைவு செய்யும் விதமாக படுக்கை உபகரணங்களான பாயுடன் கூடிய மெத்தை, போர்வை, இரண்டு உறைகளுடன் கூடிய தலையணை மற்றும் அன்றாட தேவைக்கான பொருட்கள் அடங்கிய வரவேற்பு பெட்டகம் வழங்கப்படுகிறது.

2024-2025 ஆம் நிதியாண்டில் 44,289 மாணாக்கருக்கு ரூ.7.33 கோடி மதிப்பீட்டில் வரவேற்பு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026- ஆம் நிதியாண்டில் ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**எ. விடுதி மாணாக்கருக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்**

நல்லோசை எனும் கலை, அறிவியல், விளையாட்டு, தொழில் நுட்பம், மென்பொருள் மற்றும் பணித்திறன்களில் திறமையை மேம்படுத்துதல் தொடர்பான சிறப்பு திறன் மேம்பாட்டுப் பயிற்சி கல்லூரி விடுதி மாணாக்கருக்கும், கற்றல் இனிதே எனும் சிறப்பு கல்வி சார்ந்த பயிற்சி, பள்ளி விடுதி மாணாக்கருக்கும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் ரூ. 10.00 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளது.

**ஏ. "களம் ஆடு" - கோடை கலைத்திறன் முகாம்**

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு கலை, திறன் மேம்பாட்டுப்

பயிற்சி, மாணாக்கருக்கான அரசின் திட்டங்கள் மற்றும் உயர்கல்வி படிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு “களம் ஆடு” என்ற கோடை கலைத்திறன் முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

**ஐ. பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்**

மாணாக்கரின் பொது அறிவுத் திறனை மேம்படுத்துவதுடன், தற்போது நிலவும் வேலை வாய்ப்புகளுக்கான போட்டிச் சூழலில் குடிமைப்பணி தேர்வுகள் உள்ளிட்ட பிற போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் வகையில் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் ஆண்டுதோறும் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன.

| வ. எண் | பள்ளிகள் / விடுதிகள் | நூலக புத்தகங்கள் / பருவ இதழ்கள் (ஆண்டுக்கு) (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் | 1,450/- |
| 2. | பள்ளி விடுதிகள் | 3,690/- |
| 3. | கல்லூரி விடுதிகள் | 7,997/- |

கல்லூரி விடுதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் நாளிதழ்களுடன் மாத இதழ்களான திட்டம், யோஜனா, குருஷேத்ரா, வார இதழ்களான வேலைவாய்ப்பு செய்திகள், இந்தியா டுடே, வருட புத்தகமான இந்தியா இயர் புத்தகம் மற்றும் போட்டித் தேர்வுக்கான வினா வங்கி ஆகியவை வழங்கப்படுகின்றன.

பள்ளி விடுதிகளுக்கு செய்தித்தாள்கள் (2 தமிழ் மற்றும் 1 ஆங்கில நாளிதழ்), மாத இதழ்களான திட்டம், சம்பக், மேஜிக்பாட், டெல் மி ஒய், வருட புத்தகமான மனோரமா இயர் புக்

மற்றும் போட்டித் தேர்வுக்கான வினா வங்கி ஆகியவை வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், 2024-2025-ஆம் நிதியாண்டில், ரூ.59.92 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.60.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஒ. விடுதிகளில் செய்து தரப்பட்டுள்ள இதர வசதிகள்**

(i) சமையல் எரிவாயு இணைப்பு, குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், மாவு அரவை இயந்திரங்கள், மின்னணு எடை இயந்திரங்கள், மின் அரைப்பான்கள்.

(ii) ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுகாதார குட்டைத் தகளிகள்.

(iii) மின் நூலகம் மற்றும் நூலக வசதி.

(iv) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் ஆங்கில பேச்சு திறமைக்கான பயிற்சி

(v) ஊடாடும் அடையாளப் பலகை (Digital signage board)

## 3.2 உணவு மற்றும் சில்லரைச் செலவினங்கள்

ஆதிதிராவிடர் நல விடுதிகளில் வழங்கப்படும் உணவுக் கட்டணம், விழா நாட்களுக்கான சிறப்பு உணவுக் கட்டணம் மற்றும் சில்லரைச் செலவினங்களுக்கான கட்டணம் ஆகியவை பின்வருமாறு வழங்கப்பட்டு வருகின்றன:-

| கட்டணங்கள் | பள்ளி விடுதி மாணாக்கர் | கல்லூரி விடுதி மாணாக்கர் |
|---|---|---|
| உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) | ரூ.1,400/- | ரூ.1,500/- |

| கட்டணங்கள் | பள்ளி விடுதி மாணாக்கர் | கல்லூரி விடுதி மாணாக்கர் |
|---|---|---|
| சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய், சிகைக்காய் மற்றும் முடிதிருத்தம்) (ஒரு மாதத்திற்கு) | ரூ.100/- | ரூ.150/- |
| சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்) (ஒரு பண்டிகைக்கு) | ரூ.40/- | ரூ.80/- |

## 3.3 தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

### (i) விடுதிகள்

அரசுடன் இணைந்து சேவை செய்து வரும் 16 தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 18 விடுதிகளில் தங்கிப்பயிலும்

4,432 ஆதிதிராவிட மாணாக்கருக்கும் அரசு விடுதிகளில் பயிலும் மாணாக்கருக்கு இணையாக உணவுக் கட்டணம், பல்வகை செலவினம் மற்றும் இதர சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

**(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்**

2006 ஆம் ஆண்டு முதல் தூத்துக்குடி மாவட்டத்தில் முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளி மற்றும் இரண்டு விடுதிகளில் பணிபுரியும் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் அரசால் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

2024-2025-ஆம் நிதியாண்டில், ரூ.12.74 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.12.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.4 அரசு ஆதிதிராவிடர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

தொழிற்பயிற்சி பயில ஏதுவாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் பின்வருமாறு நடத்தப்பட்டு வருகின்றன.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழிற் பயிற்சி நிலையம் அமைந்துள்ள இடம் | மாணாக்கரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கடலூர் | சிதம்பரம் | 253 |
| 2. | திருவள்ளூர் | வடகரை | 194 |
| **மொத்தம்** | | | **447** |

## 4. சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

ஆதிதிராவிடர் மக்களின் சமூக, பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4.1 அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் வகையில் "அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், ஆண்டிற்கு ரூ.200.00 கோடி வீதம் ஐந்து ஆண்டுகளில் ரூ.1000.00 கோடி மதிப்பீட்டில், நகர மற்றும் ஊரகப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில்

அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

2023-2024-ஆம் நிதியாண்டில், ரூ.200.00 கோடி மதிப்பீட்டில் 1690 உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2024–2025-ஆம் நிதியாண்டு முதல் ரூ.230.00 கோடியாக உயர்த்தப்பட்டு, 1966 உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 120 கிராம அறிவுசார் மையங்கள் ரூ.117.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

இப்பணிகள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பேரூராட்சிகள் இயக்ககம் மற்றும்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.280.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.2 பிரதம மந்திரியின் முன்னோடி கிராம திட்டம் (Pradhan Mantri Adarsh Gram Yojana - PMAGY)**

மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதத்திற்கு மேல் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த கிராமங்களில் அடிப்படை வசதிகளான குடிநீர், சுகாதாரம், கல்வி, உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து, சமூக பாதுகாப்பு, கிராமப்புற சாலை, வீட்டு வசதி, மின்சாரம் மற்றும் எரிபொருள், விவசாய நடைமுறைகள், நிதி சேர்க்கை, டிஜிட்டல்மயமாக்கல், வாழ்வாதாரம் மற்றும் திறன் மேம்பாடு தேவைகளை கண்டறிந்து

பூர்த்தி செய்வதன் மூலம் கிராமங்களில் தன்னிறைவான வளர்ச்சியினை உருவாக்குவது பிரதம மந்திரியின் முன்னோடி கிராம திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள கிராமம் ஒன்றிற்கு ரூ.20.00 இலட்சம் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது.

2018-2019 முதல் 2024–2025 ஆம் நிதியாண்டு வரை ரூ.573.76 கோடி மதிப்பீட்டில் 2919 கிராமங்களில் 9028 பணிகள் தேர்வு செய்யப்பட்டு 8930 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தேர்வு செய்யப்பட்ட 2919 கிராமங்களில், 2913 கிராமங்கள் முன்னோடி கிராமமாக (Adarsh Gram) அறிவிக்கப்பட்டுள்ளன.

2025-2026-ஆம் நிதியாண்டில் மீதமுள்ள பணிகளை மேற்கொள்ள ரூ.32.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.3 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார நிலையினை உயர்த்திடும் வகையில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிலங்கள் தனிநபர் பேச்சுவார்த்தையின் மூலமாகவோ அல்லது நடைமுறையிலுள்ள நிலஎடுப்பு சட்டங்களின் மூலமாகவோ கையகப்படுத்தப்பட்டு தகுதியான பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ், பயன்பெறும் பயனாளிகளின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.1,00,000/-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பகுதி | வீட்டு மனையின் பரப்பளவு |
|---|---|---|
| 1 | கிராமப்புறம் | 3 சென்ட் |
| 2 | நகராட்சி | 1½ சென்ட் |
| 3 | மாநகராட்சி | 1 சென்ட் |

2024–2025 ஆம் நிதியாண்டில் 1478 பயனாளிகளுக்கு ரூ.6.00 கோடி மதிப்பிலான இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது.

நிலம் கையகம் செய்யப்பட்ட நேர்வுகளில், நீதிமன்ற தீர்ப்புகளின்படி, 2024–2025ஆம் நிதியாண்டில், ரூ.23.48 கோடி உயர் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.26.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகங்கள் தொடர்பான கலை, பண்பாடு, இலக்கிய படைப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் செயல்பட்டு வருகிறது.

கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகியவற்றில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் எழுத்தாளர்களுக்கான பரிசுத் தொகையானது, தனி பணிக்குழு நிதி (Corpus Fund)யில் உள்ள வைப்புத் தொகையான

ரூ.50.00 இலட்சத்திலிருந்து பெறப்படும் வட்டித்தொகை மூலம் வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 9 எழுத்தாளர்களுக்கும், ஆதிதிராவிடர் வாழ்வியலைப் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அல்லாத 1 எழுத்தாளருக்கும் மற்றும் பழங்குடியினர் வாழ்வியலைப் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத 1 எழுத்தாளருக்கும் என மொத்தம் 11 எழுத்தாளர்களுக்கு தலா ரூ.1,00,000/- வீதம் அல்லது தெரிவு செய்யப்பட்ட நூல்களை வெளியிட ஆகும் செலவு இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

## அ) மொழிபெயர்ப்புகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குறித்த ஆய்வுகளுக்கு உதவிடவும், கலை, பண்பாடு, கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் சிறந்த எழுத்தாளர்களின் தமிழ்ப் படைப்புகள் உலகளவில் சென்றடைந்திடும் வகையில் பின்வரும் ஆறு படைப்புகளை மறு பதிப்பு செய்துள்ளது.

1. பிராமணரல்லாத நூற்றாண்டை நோக்கி: அயோத்திதாசர் முதல் பெரியார் வரை – மொழிபெயர்த்தவர் - திருமதி. வி. கீதா மற்றும் திரு. எஸ்.வி. ராஜதுரை
2. கருக்கு – திருமதி.பாமா - மொழிபெயர்த்தவர் - லக்ஷ்மி ஹோல்ஸ்ட்ராம்
3. இருண்ட உட்புறங்கள்: சாதி மற்றும் கலாச்சாரம் பற்றிய கட்டுரைகள் - திரு. ராஜா கௌதமன் – மொழிபெயர்த்தவர் - தியோடர் பாஸ்கரன்
4. கூகை – திரு சோ.தர்மன் – மொழிபெயர்த்தவர் - வசந்த சூர்யா

5. வடு - திரு. கே.ஏ.குணசேகரன் – மொழிபெயர்த்தவர் - திருமதி. வி.காதம்பரி
6. மாற்றத்தின் பிடியில் – எழுதி மொழிபெயர்த்தவர் - திருமதி. பி.சிவகாமி

மேலும், மேற்கண்ட மறுபதிப்புகளைத் தவிர, அயோத்திதாசரின் சிந்தனைகள், M.C.இராஜா அவர்களின் கட்டுரைகள், இமயம் அவர்கள் எழுதிய செடல், ஆதிதிராவிடர் எழுத்தாளர்களின் சிறுகதைகள் ஆகியவைகள் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.

## 6. டாக்டர் அம்பேத்கர் விருது

சமுதாயத்தில் உள்ள சாதி வேறுபாடுகளை களைந்து சமத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக தொண்டாற்றி வரும் தமிழ்நாட்டைச் சார்ந்த ஒருவருக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று டாக்டர் அம்பேத்கர்

விருது வழங்கப்படுகிறது. இவ்விருதுடன் பரிசுத் தொகையாக ரூ.5,00,000/-க்கான காசோலை, தகுதியுரை மற்றும் 8 கிராம் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசால் 1998 ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக தொண்டாற்றி வரும் 27 நபர்களுக்கு டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டுள்ளது.

2024-ஆம் ஆண்டிற்கான "டாக்டர் அம்பேத்கர் விருது" மக்களவை உறுப்பினர் முனைவர். து.ரவிக்குமார் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர், பகுத்தறிவு கொள்கையால் ஈர்க்கப்பட்டு தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக விளிம்புநிலை மக்களின்

மேம்பாட்டுக்காக கருத்தியல் தளத்திலும், களப் பணிகளிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## 7. சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்

ஆதிதிராவிடர் மக்களின் சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை உறுதி செய்து அம்மக்களின் சட்டப்பூர்வமான உரிமைகளை காத்திடும் பொருட்டு மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

## மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு

<table>
<tr><td>1.</td><td>மாவட்ட ஆட்சியர்</td><td>தலைவர்</td><td rowspan="3">ஆதிதிராவிடர் (sc) சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226-ன்படி உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136-ன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.</td></tr>
<tr><td>2.</td><td>மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்</td><td>உறுப்பினர்-செயலர்</td></tr>
<tr><td>3.</td><td>மானுடவியல் வல்லுநர்</td><td>உறுப்பினர்</td></tr>
</table>

## 8. வன்கொடுமை தடுப்புச் சட்டம் செயல்படுத்துதல்

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்திடவும், தீண்டாமை, அடக்குமுறை, குற்றச் செயல், சமூக

ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை தடுக்கவும் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 மற்றும் 2018 ஆகிய சட்டங்கள் இந்திய அரசால் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் வன்கொடுமைகளை தடுக்கவும், சமூக நல்லிணக்கத்தை வளர்க்கவும், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இப்பிரிவானது காவல்துறைத் தலைவர், ஒரு உதவி காவல் துறைத் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 38 காவல் துணை கண்காணிப்பாளர்கள் உள்ளடக்கிய சமூக நீதி மற்றும் மனித உரிமை

பிரிவுகள் உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

வன்கொடுமைகள் குறித்து புகார் அளிக்கவும், வன்கொடுமை தடுப்புச் சட்டம் குறித்து சட்ட ஆலோசனைகள் வழங்கவும் தொழில்நுட்ப வசதியுடன் கூடிய உதவி மையம் (Help line) அமைக்கப்பட்டுள்ளது. (உதவி மைய எண்.14566) மற்றும் (1800 2021 1989 )

**(அ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் மறுவாழ்வு தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க ஏதுவாக தமிழகத்தில் 23 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கு அளிக்கப்படும் தீருதவி குறைந்தபட்சம்

ரூ.85,000/-லிருந்து ரூ.1,00,000/-ஆகவும் அதிகபட்சம் ரூ.8,25,000/-லிருந்து ரூ.12,00,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

2024-2025-ஆம் நிதியாண்டில், தீருதவித் தொகை, கருணைத் தொகை மற்றும் ஓய்வூதியத்திற்காக ரூ.71.62 கோடி வழங்கப்பட்டுள்ளது.

| உதவிகள் விவரம் | தொகை ரூ. | பயனாளிகள் | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| தீருதவி | 49,73,01,182 | 2764 | 1835 |
| கருணைத் தொகை | 13,53,16,563 | 2692 | 1790 |
| ஓய்வூதியம் | 8,01,30,140 | 147 | 542 |
| பள்ளிக் கட்டணம் | 34,60,964 | 18 | 8 |
| அத்தியாவசிய பொருட்கள் | 22,000 | - | 2 |

2021-ஆம் ஆண்டு முதல், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின்

குடும்பங்களைச் சார்ந்த 414 நபர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2025-2026 ஆம் நிதியாண்டில், ரூ.80.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) மனிதநேய வார விழா – சமத்துவ விருந்து**

பொது மக்களிடையே தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், சமத்துவத்தை பரப்புவதற்காகவும், ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24 முதல் 30-ஆம் தேதி வரை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் "மனிதநேய வார விழா" நடத்தப்படுகிறது. மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/-ம் மற்றும் மாநில அளவில் ஒரு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து மனிதநேய

வார விழா நடத்துவதற்கு ரூ.1,00,000/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமத்துவ விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. இதற்காக 37 மாவட்டங்களுக்கு (சென்னை தவிர) தலா ரூ.25,000/– வீதம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2024–2025-ஆம் நிதியாண்டில், ரூ.2.13 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.23.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

பொது மக்கள் அனைவரும் சாதி வேற்றுமையைக் களைந்து, சமூக நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு முன்னோடியாக, சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் (சென்னை தவிர) தேர்ந்தெடுத்து, அக்கிராம வளர்ச்சிப் பணிக்காக ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கப்பட்டு வருகிறது.

2024-2025 ஆம் ஆண்டில் 37 மாவட்டங்களில் உள்ள சிறந்த கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அக்கிராம வளர்ச்சி பணிக்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில், ரூ.3.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) விழிப்புணர்வு பயிற்சிகள்**

- வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தினை முறையாக நடைமுறைப்படுத்தவும், உரிய நிவாரணம் வழங்கவும் "சமத்துவம் காண்போம்" என்ற தலைப்பில் ரூ. 40.00 இலட்சம் செலவில் 983 அரசு அலுவலர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.
- வன்கொடுமை தடுப்புச் சட்டம் குறித்து மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் தொண்டுசாரா

நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு குறித்த பயிற்சி ரூ.3.00 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

**9. மயானம் மற்றும் மயானப் பாதை வசதி ஏற்படுத்தி தருதல்**

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயானம் மற்றும் மயான பாதைக்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. மயானம் மற்றும் மயானப்பாதைகள் ஏற்படுத்திட தமிழ்நாடு நிலஎடுப்புச் சட்டம், 31/1978–இன் படியும், தனிநபர் பேச்சுவார்த்தை மூலமாகவும் நில எடுப்பு செய்யப்படுகிறது.

2023–2024-ஆம் ஆண்டு முதல் அயோத்தி தாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மயானத்திற்கு செல்ல சாலை மற்றும் மயான சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024–2025ஆம் நிதியாண்டில் ரூ.11.51 இலட்சம் செலவில் மயானத்திற்கு தேவைப்படும் அடிப்படை வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மயானம் மற்றும் மயானப்பாதை வசதி ஏற்படுத்த 7.32 ஏக்கர் நிலம் ரூ.90.30 இலட்சம் மதிப்பீட்டில் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.60.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10. சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல்**

சாதி வேறுபாடுகளற்ற மயானத்தினை பயன்பாட்டில் கொண்டிருக்கும் முன்மாதிரி கிராமங்களை ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மாவட்டத்திற்கு (சென்னை

நீங்கலாக) மூன்று முன்மாதிரி கிராமங்களை தேர்வு செய்து அக்கிராமங்களின் வளர்ச்சிப் பணிக்கு தலா ரூ. 10.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

2024–2025-ஆம் நிதியாண்டில் 60 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பரிசுத் தொகையாக ரூ.6.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2025–2026-ஆம் நிதியாண்டில் ரூ.8.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. ஈமச்சடங்கு உதவித்தொகை**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் குடும்பங்களில் நடக்கும் துக்க நிகழ்வுகளுக்கான ஈமச்சடங்கு செலவுகளை மேற்கொள்ள ரூ.5,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

2024–2025-ஆம் நிதியாண்டில், ரூ.9.95 கோடி மதிப்பிலான உதவித்தொகை 20,037 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2025–2026-ஆம் நிதியாண்டில் ரூ.9.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான இதர முன்னெடுப்புகள்

- தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம், புதிரை வண்ணார் நல வாரியம், பழங்குடியினர் நல வாரியம் மற்றும் நரிக்குறவர் நல வாரியங்கள் மறுசீரமைக்கப்பட்டு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- புதிரை வண்ணார் மக்களின் கல்வி சமூக பொருளாதார நிலை கண்டறிந்து உரிய நலத்திட்டங்கள் உருவாக்க

ஏதுவாக கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல்திட்டம் (Development Action Plan for SC/ST), வன்கொடுமை தடுப்புச் சட்டம், தொல்குடி, வன உரிமைச் சட்டம், ஆதிதிராவிடர் நல மேலாண்மை அமைப்பு (ADW Management System), விடுதிகள் மேலாண்மை அமைப்பு திட்டங்களை கண்காணிப்பதற்கு மென்பொருள் ரூ.1.50 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

## II. பழங்குடியினர் நலன்

**"....வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"**

என்ற தொல்காப்பிய கூற்றின்படி, தமிழ்ச் சமுதாயம் சங்ககாலத்தில் நிலங்களை மட்டும் பகுத்து வாழ்ந்தனர். மக்களில் பாகுபாடோ, பிரிவோ இருந்ததாக இல்லை. இதே உன்னத நிலை தொடர்ந்திடும் வண்ணம், அனைத்து மக்களும் கல்வி, சமூக, பொருளாதாரத்தில் உயர்ந்து நீடித்த நிலையான வளர்ச்சியை அடைய இவ்வரசு பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அதனடிப்படையில், பழங்குடியின மக்களின் கல்வி, சமூக – பொருளாதார மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திட்டங்களை உருவாக்கவும் அதனை செயல்படுத்தவும் 2000ஆம் ஆண்டு

பழங்குடியினர் நலனுக்காக தனி இயக்குநரகம் தோற்றுவிக்கப்பட்டது.

2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 36 வகையான உட்பிரிவுகளைச் சார்ந்த 7,94,697 பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். 2023-ஆம் ஆண்டில் நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்பட்டு தற்போது 8,41,558 பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.17 விழுக்காடு ஆகும்.

பழங்குடியின மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக பள்ளி மற்றும் விடுதிகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல், மாணாக்கருக்கான கல்வி உதவித் தொகை வழங்குதல், வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு தேவையான நலத்திட்ட

உதவிகள் மேற்கொள்ளுதல், குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உருவாக்குதல் மற்றும் பழங்குடியின மொழிகளையும் பண்பாட்டினையும் பாதுகாத்தல் போன்ற பணிகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் (Integrated Tribal Development Programme Areas)**

சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள வருவாய் வட்டார அளவில் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் பழங்குடியின மக்கள் வசிக்கும் 10 மலைப்பகுதிகளை ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளாக (ITDP Areas) வகைப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் பழங்குடியினருக்கான

திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஏழு திட்ட அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு அவர்களின் கண்காணிப்பில் பல்வேறு நலத்திட்ட பணிகள் செயல்படுத்தப்படுகிறது.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப் பகுதிகள்**

| வ. எண். | மாவட்டம் | திட்டப்பகுதிகள் |
|---|---|---|
| 1. | சேலம் | ஏற்காடு, பச்சைமலை, அருநூத்துமலை மற்றும் கல்வராயன்மலை |
| 2. | நாமக்கல் | கொல்லிமலை |
| 3. | கள்ளக்குறிச்சி | கல்வராயன்மலை |
| 4. | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை |
| 5. | திருச்சிராப்பள்ளி | பச்சைமலை |
| 6. | தருமபுரி | சித்தேரிமலை |
| 7. | திருப்பத்தூர் | ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை |

## 1. கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

“கல்வி மட்டுமே நம்மை சிறந்த மனிதர்களாக்கும். இதுவே, சமூக மற்றும் பாலின சமத்துவத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் மிகப்பெரிய தாக்கத்தை உருவாக்கும் கருவியாகும்.” என்ற நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை அமர்த்தியாசென் அவர்களின் கூற்றுக்கிணங்க, சமூக சமத்துவத்தினை மீட்டெடுக்கும் பொருட்டு கல்விக்காக பல்வேறு முன்னெடுப்புகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

பழங்குடியினர் நலத்துறையின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 53.57 விழுக்காடு நிதி கல்விக்காக செலவிடப்படுகிறது.

### 1.1 தொல்குடியினர் புத்தாய்வு திட்டம்

தமிழ்நாட்டு பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மேற்கொள்ளும்

இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டம் மற்றும் முனைவர் பட்ட மேலாய்வாளர் படிப்பு / ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணாக்கரை ஊக்கப்படுத்தும் விதமாக புத்தாய்வு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தகுதி பெற மாணக்கரின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ. 8.00 இலட்சத்துக்குள் இருத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் இளங்கலை மற்றும் முதுகலை மாணாக்கருக்கு மாதம் ரூ. 10,000/- வீதம் ஆறு மாதத்திற்கும், முனைவர் பட்டம் மற்றும் முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கு மாதம் ரூ.25,000 வீதம் மூன்று வருடத்திற்கும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2024–2025 ஆம் நிதியாண்டில் 70 மாணாக்கர்கள் தேர்வு செய்யப்பட்டு ஆய்வு

உதவித் தொகையாக ரூ.1.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**1.2 பத்தாம் வகுப்புக்கு மேற்பட்ட படிப்புகளுக்கான (போஸ்ட் மெட்ரிக்) கல்வி உதவித்தொகை திட்டம்**

பழங்குடியின மாணாக்கரின் உயர்கல்வியினை ஊக்குவிக்கும் பொருட்டு, 10-ஆம் வகுப்புக்கு மேற்பட்ட படிப்புகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இக்கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், மாணாக்கருக்கு கல்வி கட்டணம் மற்றும் பராமரிப்பு படி கல்வி உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

### 1.2.1 கல்விக் கட்டணம்

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் 10ஆம் வகுப்பிற்கு மேல் கல்வி பயிலும் மாணாக்கருக்கு அரசு நிர்ணயித்த கட்டணங்கள்

- சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணாக்கருக்கு கல்விக் கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கல்விக் கட்டணங்கள்

### 1.2.2. பராமரிப்பு படி (Maintenance Allowance)

| தொகுதி | படிப்புகள் | பராமரிப்புப்படி (ரூ.) மாதத்திற்கு | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் | இதர மாணாக்கர் |
| I | இளங்கலை மற்றும் முதுகலை தொழில்முறை பட்டப்படிப்புகள் | 1200 | 550 |
| II | பட்டப்படிப்பு மற்றும் பட்டய படிப்புக்கு வழிவகுக்கும் பிற தொழில்முறை படிப்புகள் | 820 | 530 |
| III | தொகுதி I மற்றும் II-ல் இடம்பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் | 570 | 300 |
| IV | அனைத்து மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் பட்டப்படிப்பு அல்லாத படிப்புகள் | 380 | 230 |

சுயநிதி கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கான கல்விக் கட்டணங்கள் கல்லூரி வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணாக்கருக்கான கல்வி கட்டணங்கள் மாணக்கரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

2024–2025-ஆம் நிதியாண்டில், 22,659 மாணவர்களுக்கு ரூ.25.79 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

2025–2026-ஆம் நிதியாண்டில் ரூ.46.44 கோடி நிதி இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.3 ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான (ப்ரி மெட்ரிக்) கல்வி உதவித்தொகைத் திட்டம்

9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கு (ப்ரி மெட்ரிக்) கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினத் தொகை 75:25 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

| விவரம் | விடுதி மாணாக்கர் | இதர மாணாக்கர் |
|---|---|---|
| | (ரூபாயில்- ஓர் ஆண்டிற்கு) | |
| பராமரிப்புப் படி | 5,250/- | 2,250/- |
| தனிப்பட்ட மானியம் | 1,000/- | 750/- |

இக்கல்வி உதவித் தொகை, மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படுகிறது.

2024–2025-ஆம் நிதியாண்டில், 16,314 மாணவர்களுக்கு ரூ.4.89 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

2025–2026-ஆம் நிதியாண்டில் ரூ.5.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.4 உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை திட்டம்

மாணவர்கள் பொருளாதார தடையின்றி கல்வி பயில உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வந்தாலும், அரசு விடுதிகள் அல்லாத கட்டண விடுதிகளில் தங்கிப் பயிலும் பழங்குடியின மாணாக்கரின் விடுதி செலவினத்தை ஈடுசெய்ய கூடுதலாக சிறப்பு உதவித் தொகைகள் கீழ்க்கண்டவாறு மாணாக்கரின் வங்கிக்

கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

| வ. எண். | படிப்புகள் | உதவித் தொகை (ஓர் ஆண்டுக்கு) |
|---|---|---|
| 1 | இளநிலை பட்ட மற்றும் பட்டய படிப்புகள் | ரூ.7,500/- |
| 2 | முதுநிலை பட்ட, பட்டய படிப்புகள் மற்றும் இளநிலை / முதுநிலை தொழிற் படிப்புகள் | ரூ.8,000/- |

கல்வி உதவித்தொகை பெற பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், 2024-2025-ஆம் நிதியாண்டில் 1,047 மாணாக்கருக்கு ரூ.80.00 இலட்சம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில், ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.5 பெண் கல்வி ஊக்கத்தொகை திட்டம்

பள்ளி செல்வதை உறுதிப்படுத்தவும், இடைநிற்றலைத் தவிர்க்கவும், 3 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து பழங்குடியின பெண் குழந்தைகளுக்கும் ஊக்கத் தொகை கீழ்க்கண்டுள்ளவாறு வழங்கப்படுகிறது.

| வ. எண் | வகுப்பு | ஊக்கத்தொகை (ரூ.) (ஓர் ஆண்டுக்கு) |
|---|---|---|
| 1 | 3 முதல் 5 வரை | 500/- |
| 2 | 6 | 1000/- |
| 3 | 7 மற்றும் 8 | 1500/- |

இவ்வுதவித்தொகை, மாணவிகளின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2024-2025-ஆம் நிதியாண்டில் 29,913 மாணவிகளுக்கு ரூ.2.92 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.3.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.6 இதர கல்விக் கட்டணச் சலுகைகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கர் அனைவருக்கும், வருமான உச்ச வரம்பின்றி பின்வரும் கல்விக் கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(அ) கல்லூரி மாணாக்கருக்கான கற்பிப்புக் கட்டணச் சலுகை

(ஆ) இளங்கலை மாணாக்கருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகை

(இ) முதுகலை மாணவியருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகை

(ஈ) கல்லூரி மாணாக்கருக்கான விண்ணப்ப கட்டணச் சலுகை

(உ) பழங்குடியினர் பள்ளி மாணாக்கருக்கான சிறப்புக் கட்டணச் சலுகை

(ஊ) 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கருக்கான பொதுத் தேர்வு கட்டணச் சலுகை

## 1.7 கல்வி மேம்பாட்டிற்கான இதர முன்னெடுப்புகள்

- தனியார் செவிலியர் பயிற்சியில் பட்டயபடிப்பு பயிலும் பழங்குடியின மாணவியர்களுக்கு தலா ரூ.70,000/- வீதம் மூன்றாண்டுகளுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது

- பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் ஏகலைவா மாதிரி

பள்ளிகளில் JEE, CLAT, NIFT, NEET மற்றும் CUET போன்ற உயர்கல்விக்கான நுழைவுத் தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இதன்மூலம் முதன்முறையாக கடந்த இரண்டு ஆண்டுகளில் தலைசிறந்த கல்வி நிறுவனங்களான NIT, திருச்சியில் 7 மாணாக்கரும், NIFT, சென்னை மற்றும் பெங்களூரில் 4 மாணாக்கரும், அரசு மருத்துவக்கல்லூரியில் 2 மாணாக்கரும் மற்றும் தேசிய சட்டப்பல்கலைக் கழகம், திருச்சியில் ஒரு மாணவரும் பயின்று வருகின்றனர்.

- "**எனக்கு ஒரு கனவு இருக்கிறது!**" எனும் பள்ளி மாணவர்களுக்கான கலை மற்றும் தலைமைப் பண்பிற்கான பயிற்சி முகாம் 26.12.2024 முதல் 30.12.2024 வரை சென்னை, அம்பத்தூரில் நடைபெற்றது.

அதில், பழங்குடியினர் நல பள்ளிகளில் 8 மற்றும் 9ஆம் வகுப்பு பயிலும் 80 பள்ளி மாணாக்கர் பங்கேற்றனர்.

- அரசின் சீரிய முயற்சிகள் காரணமாக உயர்நிலைகல்வி நிலையில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பழங்குடியின மாணக்கர் 100% உயர்கல்வி சேர்க்கை பெற்றுள்ளனர்.

- 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயின்று கல்வியை தொடர முடியாமல் இடைநின்ற 120 மாணாக்கர் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டு கல்வியை தொடர்ந்து பயின் று வருகின்றனர்.

- சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்தி பணி வழங்கும் பொருட்டு, ஆசிரியர் பயிற்சி முடித்த 665 பழங்குடியினர் மாணாக்கருக்கு

16 பயிற்சி மையங்களில் ஆசிரியர் தகுதித் தேர்விற்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு சிறப்பு ஆசிரியர்கள் மூலம் மாலை நேர சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றன.

- பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தொல்குடியினர் தினம் (தேசிய பழங்குடியினர் தினம்) நவம்பர் 15ம் தேதி கொண்டாடப்பட்டது. மாநிலத்திலேயே முதன்முறையாக 328 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பல்துறை போட்டிகள் நடத்தப்பட்டது. இதனில், 24,000 மாணாக்கர் பங்கேற்றனர். வனத்துறையுடன் இணைந்து 24,000 மரக்கன்றுகள் பள்ளி வளாகங்களில் நடப்பட்டன.

## 2. உண்டி உறைவிடப் பள்ளிகள்

பழங்குடியின மக்களின் பராம்பரியத்தினை பின்பற்றி கல்வி அறிவு விகிதத்தினை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் உணவு மற்றும் தங்கும் வசதிகளுடன் கூடிய பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

**அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம்** (2024-2025)

| பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 212 | 4,312 | 4,097 | 8,409 |
| நடுநிலைப் பள்ளிகள் | 49 | 2,052 | 1,906 | 3,958 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 31 | 1,983 | 1,538 | 3,521 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 28 | 4,530 | 4,021 | 8,551 |
| **மொத்தம்** | 320 | 12,877 | 11,562 | 24,439 |

2023-2024ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு தேர்ச்சி விகிதம் 84% லிருந்து 91% ஆக உயர்ந்துள்ளது. 12-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு தேர்ச்சி விகிதம் 94% லிருந்து 95% ஆக உயர்ந்துள்ளது.

## 2.1 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள்

பழங்குடியின மாணாக்கருக்கு ஆங்கில வழிக்கல்வியை வழங்க ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப் பங்களிப்புடன் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள 8 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

| வ. எண் | மாவட்டம் | இடம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | வெள்ளி-மலை | 262 | - | 262 |
| 2 | சேலம் | அபிநவம் | - | 450 | 450 |
| 3 | நீலகிரி | மு.பாலாடா | 134 | 70 | 204 |

| வ. எண் | மாவட்டம் | இடம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 4 | நாமக்கல் | செங்கரை | 255 | 127 | 382 |
| 5 | திருவண்ணா-மலை | புளியம்பட்டி | 221 | 198 | 419 |
| 6 | திருப்பத்தூர் | கீழுர் | 176 | 140 | 316 |
| 7 | செங்கல்பட்டு | குமிழி | 116 | 65 | 181 |
| 8 | சேலம் | ஏற்காடு | 164 | 100 | 264 |
| மொத்தம் | | | 1328 | 1150 | 2478 |

2023–2024-ஆம் கல்வியாண்டில் இப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 94% மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 96 % ஆகும்.

2023–2024-ஆம் கல்வியாண்டில் இத்துறைப் பள்ளிகளில் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 14 பள்ளிகளும் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 28 பள்ளிகளும் 100% தேர்ச்சி அடைந்துள்ளன.

அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலை பள்ளிகளின் செயல்பாட்டினை

ஊக்குவிக்கும் விதமாக 2023-2024 ஆம் கல்வியாண்டில் அரசு பொதுத் தேர்வில் 12-ஆம் வகுப்பில் 100% தேர்ச்சி விகிதம் பெற்ற திருவண்ணாமலை மாவட்டம் நம்மியம்பட்டு பழங்குடியினர் நல உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.5.00 இலட்சம் நிதி வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

### 3. விடுதிகள்

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள பழங்குடியின மாணாக்கர் தங்கி கல்வி பயில்வதற்கான சூழ்நிலையை உருவாக்கி, தங்குமிடம், உணவு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய நவீன விடுதிகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம் (2024-2025)

| விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பள்ளி விடுதிகள் | 38 | 1009 | 998 | 2007 |
| கல்லூரி விடுதிகள் | 5 | - | 313 | 313 |
| தொழிற்-பயிற்சி நிலைய விடுதிகள் | 6 | 437 | - | 437 |
| **மொத்தம்** | **49** | **1446** | **1311** | **2757** |

- மாதம் ஒன்றுக்கு உணவுக் கட்டணம் பள்ளி மாணாக்கருக்கு தலா ரூ.1,400/- ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு தலா ரூ.1,500/- ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.

- மலைப்பாங்கான இடங்களில் அமைந்துள்ள பழங்குடியினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு சூரிய ஒளி மின்விளக்கு (Solar Light), கம்பளி ஆடை

(Sweater) மற்றும் மழை அங்கி (Rain coat) ஆகியவை கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றன.

- பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் புதியதாக சேரும் மாணாக்கரின் தேவைகளை நிறைவு செய்யும் விதமாக படுக்கை உபகரணங்களான கம்பளி, போர்வை, தலையணை அடங்கிய பெட்டகம் (Welcome Kit) வழங்கப்பட்டுள்ளது.
- பழங்குடியினர் விடுதிகளில் மாணாக்கரின் நலனைக் கருத்தில் கொண்டு கண்காணிப்புக் கேமரா (CCTV Camera), தொடுதிரை சாதனம் பொருத்துதல் (Biometric Devices), மைய கண்காணிப்பு பலகைக்கான (Central Monitoring Dashboard) மென்பொருள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4. தொழிற்பயிற்சி நிலையங்கள்

உள்நாட்டிலும், அயல்நாட்டிலும் உற்பத்தித் துறைகளில், வேலைவாய்ப்பைப் பெறவும், சுயவேலைவாய்ப்பை தொடங்கவும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையுடன் இணைந்து பழங்குடியினருக்கென பிரத்தியேகமாக ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள் விடுதி வசதியுடன் இயங்கி வருகின்றன.

இப்பயிற்சி நிறுவனங்களில் தையல் தொழில்பயிற்சி, மின்னியல் வல்லுநர், பொருத்துநர், குழாய் செப்பனிடுபவர், கம்பி பற்றவைப்பவர், அதிநவீன CNC இயந்திர நிபுணர், தொழில்துறை எந்திரவியல், மின்வாகன பழுதுபார்ப்பவர் உள்ளிட்ட தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2024-2025-ஆண்டில் 862 மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2024-2025 -ஆம் நிதியாண்டில் ரூ.8.98 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ10.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கான நிதியுதவி

### (i) விடுதியுடன் கூடிய பள்ளி

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் Society For Rural Development (SFRD) என்ற தொண்டு நிறுவனத்தால் பழங்குடியின மாணாக்கருக்காக நடத்தப்பட்டு வரும் தொடக்க மற்றும் மேல்நிலைப் பள்ளியில் 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் 1,723 மாணாக்கரின் நலன் கருதி, பணிபுரியும் 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் மாநில

நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கான உணவுக் கட்டணம், சில்லரைச் செலவினம் மற்றும் இதர சலுகைகள் 2005-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2024–2025-ஆம் நிதியாண்டில் ரூ.3.71 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2025–2026-ஆம் நிதியாண்டில், ரூ.3.93 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகள்**

கோயம்புத்தூர் மாவட்டம் – Aim for Seva மற்றும் விருதுநகர் மாவட்டம் - ராம்கோ & குரூப் ஆகிய தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் பயிலும்

100 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக் கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் அரசு உண்டி உறைவிடப் பள்ளி மாணாக்கருக்கு இணையாக வழங்கப்படுகின்றன.

**(iii) விடுதியுடன் கூடிய பள்ளிகளை நடத்தும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கான நிதியுதவித் திட்டம்**

சேலம் மாவட்டம், ஏற்காடு மான்ட்போர்டு சமுதாய பள்ளி, கள்ளக்குறிச்சி மாவட்டம் சமுதாய சேவா பள்ளி மற்றும் PCDS - குளோபல் மெட்ரிக் பள்ளி ஆகிய தொண்டு நிறுவனங்களால் பழங்குடியின மாணாக்கருக்கு உண்டி உறைவிடப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன.

2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.4.18 கோடி நிதி விடுவிக்கப்பட்டு 1,625 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கு, 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ9.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. சமூக, பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள்

பழங்குடியின மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், பழங்குடியின குடியிருப்புகளில் உட்கட்டமைப்பினை உருவாக்கவும் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 6.1 தொல்குடி திட்டம்

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் சுகாதாரமான குடிநீர், மேம்படுத்தப்பட்ட சாலை வசதிகள், நவீன சூரிய மின்விளக்குகள், தெரு விளக்குகள், நவீன கழிப்பறைகளுடன் கூடிய வீடுகள், இணையதள வசதிகள், பள்ளி மற்றும்

விடுதி உட்கட்டமைப்பு மேம்பாடு போன்றவற்றை ஏற்படுத்த "தொல்குடி" திட்டம் அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், ஆண்டிற்கு ரூ.250.00 கோடி வீதம் 4 ஆண்டுகளில் ரூ.1,000.00 கோடி மதிப்பீட்டில் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தொகையில் ரூ.225.00 கோடி மூலதன செலவினத்திற்கும், ரூ.25.00 கோடி வருவாய் செலவினத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இப்பணிகளுக்காக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மற்றும் தாட்கோ மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற பழங்குடியினர் மக்களுக்கு ரூ. 58.99 கோடி மதிப்பீட்டில் 1874 வீடுகள் கட்டுதல்.

- பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.84.57 கோடி மதிப்பீட்டில் அமைத்து தருதல்.

- வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடி குக்கிராமங்களை இணைக்கும் சாலைகள் ரூ.51.47 கோடி மதிப்பீட்டில் அமைத்து தருதல்.

- பழங்குடியின பள்ளிக் குழந்தைகளை பரிசோதனை செய்திட 10 பாயிண்ட் ஆஃப் கேர் டெஸ்டிங் (POCT) இயந்திரங்கள், பழங்குடியினப் பகுதிகளில் இரத்த சோகையின் பரிசோதனைக்குப் பிறகு நோயாளிகளை மதிப்பீடு செய்து செல் கவுண்டர் இயந்திரங்கள் மற்றும் 20 புதிய

நடமாடும் மருத்துவ ஊர்திகள் ஆகியவை ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் வாங்கி தருதல்.

- பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் இணையதள இணைப்பு வசதிகள் மற்றும் அலைபேசி தொடர்பு வசதிகள் (Internet Connectivity and cell Phone Connectivity) ரூ.10.74 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தித் தருதல்.

இத்திட்டத்திற்கென, 2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.224.99 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025–2026ஆம் நிதியாண்டில் ரூ. 225.00 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.2 தொல்குடி – வாழ்வாதார திட்டங்கள்

**………குருந்தே முல்லை யென்று**
**இந்நான் கல்லது பூவும் இல்லை;**
**கருங்கால் வரகே, இருங்கதிர்த் தினையே,**
**சிறுகொடிக் கொள்ளே, பொறிகிளர் அவரையொடு**
**இந்நான் கல்லது உணாவும் இல்லை;**

என்ற புறநானூற்று (335) பாடலில் தெரிவிக்கப்பட்டவாறு, குருந்து [குறிஞ்சி], முல்லை (மருதம், நெய்தல்) என நான்கு வகை பூக்களும், வரகு, தினை, கொள்ளு, அவரை என்னும் நான்கு வகை உணவுப்பொருட்களை விளைவித்தனர் என்ற இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பெருமை பெற்றது தமிழ்குடி ஆகும். இந்த மகத்தான வாழ்வியலின் தொடர்ச்சியாக, விவசாயம்/ விவசாயம் சாரா தொழில்கள், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பாரம்பரிய தொழில்கள் சார்ந்த சுய மற்றும் கூட்டுத்தொழில் தொடங்குதல், சிறுவனப்

பொருட்களை மதிப்பு கூட்டுதல் போன்ற நோக்கங்களை உள்ளடக்கிய பழங்குடி மக்களுக்கென வாழ்வாதார திட்டம் "**தொல்குடி வேளாண்மை மேலாண்மை திட்டம் - ஐந்திணை**" செயல்படுத்தப்படுகிறது.

- பழங்குடியின இளைஞர்கள் வேலை வாய்ப்புகளை பெறும் வகையில் இலவச திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளித்தல்

- பழங்குடியின இளைஞர்கள் மற்றும் பட்டதாரிகள் அரசு மற்றும் பொது நிறுவனங்கள் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்த இலவச பயிற்சி அளித்தல்.

- பழங்குடியினரின் பாரம்பரியத்தை பாதுகாக்கவும் மற்றும் மொழி வளங்களை ஆவணப்படுத்துதல் மற்றும் இனவரவியல்

ஆராய்ச்சி போன்ற பணிகள் மேற்கொள்ளுதல்.

- பழங்குடியின மக்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்த அரவை இயந்திரம், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, வேளாண்மை பொருட்கள் மதிப்புக்கூட்டுதல், தையல் இயந்திரம் வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்துதல்.

- தாட்கோ நிறுவனத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பழங்குடியினர் தொழில் தொடங்க தனிநபர் மானியம் போன்ற சமூக பொருளாதார மற்றும் வாழ்வாதார முன்னேற்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.32.29 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.30.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.3 பழங்குடியின மொழிகள் ஆவணப்படுத்தல்

பழங்குடியின மொழிகளை பாதுகாக்கவும், பண்பாட்டினையும் மொழிவளங்களையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவும், பழங்குடியின மொழிகளை ஆவணப்படுத்துதல் மற்றும் ஒலி ஒளி வடிவங்களாக பதிவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

### 6.4 பழங்குடியினர் தேசிய கருத்தரங்கம்

தமிழ்நாட்டு பழங்குடியின மொழிகளை ஆவணப்படுத்துவதற்கான உரிய வழிமுறைகளை கண்டறிய புகழ்பெற்ற தேசிய

கல்வி நிலையங்கள் மற்றும் ஆய்வு மையங்களில் பணிபுரியும் ஆய்வாளர்களைக் கொண்டு "**தமிழக பழங்குடியினரின் பண்பாட்டு பாரம்பரியங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்**" என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம் தமிழகத்தில் முதன் முறையாக 2024ம் ஆண்டு செப்டம்பர் 27 மற்றும் 28 ஆகிய தினங்களில் சென்னையில் நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் பேசப்படும் தோடர், காணிக்காரர், நரிக்குறவர், இருளர் மற்றும் குறும்பர் ஆகிய பழங்குடியின மக்களின் மொழி வளங்களை ஆவணப்படுத்தும் விதமாக மொழியியல் வல்லுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மைசூரில் உள்ள இந்திய மொழிகளுக்கான மத்திய நிறுவனத்தின் (Central Institute of Indian Languages) மேற்பார்வையில் ஆவணப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 6.5 பிரதம மந்திரியின் பழங்குடியினர் முன்மாதிரி கிராமத் திட்டம் (Pradhan Mantri Aadi Adarsh Gram Yojana)

50 விழுக்காட்டிற்கும் அல்லது 500-க்கும் அதிகமான பழங்குடியின மக்கள் வசிக்கும் 167 கிராமங்களின் அடிப்படை உட்கட்டமைப்புத் தேவைகளை 5 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்திட (2021-2022 முதல் 2025-2026 வரை) இத்திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒதுக்கப்பட்ட ரூ.20.38 இலட்சம் நிதியிலிருந்தும், பிற துறைகளின் கூடுதல் நிதியுடன் "இடை நிரப்புதல்" (Gap Filling) பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**6.6 இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275 (1)-ன் கீழ் நிதியுதவி திட்டம்**

பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2024–2025-ஆம் நிதியாண்டில் ரூ.20.19 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.7 பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் (PM – JANMAN)**

ஒன்றிய அரசின் PM - JANMAN திட்டம் 9 இணைத் துறைகளுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. பழங்குடியினர் நலத்

துறை மூலம் பல்நோக்கு மையம் மற்றும் வன வள மையம் உருவாக்கி பயன்பாட்டில் உள்ளன.

2024-2025-ஆம் ஆண்டில் 35 பல்நோக்கு மையங்கள் ரூ.20.68 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கு 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.8 வனவள மையம்

இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் அதிகம் வாழும் பகுதியில் 20 உறுப்பினர்களைக் கொண்ட 15 சுய உதவிக் குழுக்களைக் கொண்டு (300 உறுப்பினர்கள்) வனவள மையம் உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு வனவள மையத்திற்கும் ரூ.15.00 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இத்தொகை இயந்திரங்கள் கொள்முதல் மற்றும் பயிற்சி அளித்தல், சிறுவனப்

பொருட்களை மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றிற்காக செலவிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் 20 வன வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**7. பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006**

வனங்களைச் சார்ந்து வாழும் பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வாழ்பவர்களின் வனம் சார்ந்த உரிமையை சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கும் பொருட்டு "பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006–இல் இயற்றப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்படி 13.12.2005-ஆம் நாளுக்கு முன்பு வனங்களைச் சார்ந்து வாழும் பழங்குடியினரும் இத்தேதிக்கு முன்பு மூன்று

தலைமுறைகளாக (75 ஆண்டுகளாக) வனங்களில் குடியிருப்போர் மற்றும் வனங்களைச் சார்ந்து வாழும் பிற இனத்தவரும் வன உரிமைகளைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

இச்சட்டத்தின் கீழ் பின்வரும் வன உரிமைகள் வழங்கப்படுகின்றன.

1. தனிநபர் உரிமை
2. சமுதாய உரிமை
3. சமுதாய வன வள உரிமை
4. சமுதாய மேம்பாட்டு உரிமை
5. அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினருக்கான குடியிருப்பு உரிமை (Habitat Right)

இச்சட்டத்தின் கீழ் பெறப்படும் விண்ணப்பங்களைக் கூர்ந்தாய்வு செய்து உரிமைகள் வழங்க கிராம சபை, துணைக்

கோட்ட அளவிலான குழு மற்றும் மாவட்ட அளவிலான குழு ஆகிய மூன்று குழுக்கள் செயல்படுகின்றன. தலைமைச் செயலாளர் தலைமையிலான மாநில அளவிலான கண்காணிப்புக் குழு இச்சட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்கிறது.

இச்சட்டத்தின் கீழ், இதுவரை 15,442 தனிநபர்களுக்கு 8945.51 எக்டேர் நில உரிமையும், 1066 எண்ணிக்கையில் சமூக உரிமைகளுக்கு 24,470.85 எக்டேர் உரிமையும் வழங்கப்பட்டுள்ளன.

**வனஉரிமைச் சட்டத்தினை செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள்**

- பழங்குடியினர் அதிகம் வசிக்கும் மாவட்டங்களை உள்ளடக்கிய வரைபடம் (FRA Atlas), தகவல் தொழில்நுட்ப வலைதளம் (FRA IT Portal) மற்றும் மாநில

அளவிலான வன உரிமைப் பிரிவுகள் (State level FR Cell) உருவாக்கப்பட்டுள்ளது.

- வன உரிமைச் சட்டத்தில் தனிநபர் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் வழங்குவது உட்பட இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, மாவட்ட வன அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு மாநில அளவிலான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு, வன உரிமை வழங்கும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

## 8. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

பழங்குடியினருக்கான சாதிச்சான்றிதழ் வழங்கும் அதிகாரம் 11.11.1989 முதல் வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு

பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்க மாநில அளவில் கீழ்க்காணும் மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**மாநில அளவிலான கூர்நோக்கு குழுக்கள்**

| | |
|---|---|
| அரசு செயலாளர் / கூடுதல் செயலாளர்/ இணைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை. | தலைவர் |
| பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் / துணை வனப்பாதுகாவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் | உறுப்பினர்-செயலர் |
| இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்/ மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் |

**கண்காணிப்பு பிரிவுகள்**

பழங்குடியினர் சாதிச் சான்றிதழின் மெய்த்தன்மை பற்றி கள ஆய்வு செய்து மாநில கூர்நோக்கு குழுக்களுக்கு அறிக்கை அளிக்க

துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் சென்னை, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களில் கண்காணிப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

காவல்துறை தலைவரின் தலைமையின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கிவரும் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவும் பழங்குடியினர் சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, களஆய்வு மேற்கொண்டு மாநில கூர்நோக்குக் குழுக்களுக்கு அறிக்கை அளிக்கின்றன.

### 9. பழங்குடியினர் ஆய்வு மையம்

பழங்குடியினரின் வாழ்க்கை முறை, பண்பாடு, மொழி, சமூக பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக 1983-84ஆம் நிதியாண்டில் நீலகிரி மாவட்டத்தில் முத்தோரை பாலாடா என்ற இடத்தில்

பழங்குடியினர் ஆய்வு மையம் தொடங்கப்பட்டது. இம்மையத்தின் நிருவாகச் செலவினங்கள் மாநில அரசாலும், திட்ட நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் ஒன்றிய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஆய்வு மையத்தின் பணிகள்:**

- பழங்குடியினர் சமூகங்கள் பற்றிய ஆராய்ச்சி ஆய்வுகளை நடத்துதல்.
- பழங்குடியினரிடையே சமூக, பொருளாதார, மத, அரசியல் மற்றும் உளவியல் மாற்றங்களைப் பதிவு செய்தல்.
- பழங்குடியின சமூகங்களின் வாழ்க்கை மற்றும் கலாச்சாரம் குறித்த மோனோகிராஃப்களை வெளியிடுதல்.
- பழங்குடியினரின் மொழியைப் பற்றி ஆராய்தல்

- மிகவும் பின்தங்கிய ஒடுக்கப்பட்ட நிலையிலுள்ள சமூகங்களை தமிழ்நாட்டின் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க பரிந்துரை செய்தல்.

- பழங்குடியினரின் அடிப்படைத் தேவைகளைப் பற்றி ஆராய்தல்.

- பழங்குடியினர் கலாச்சாரங்கள் மற்றும் மேம்பாடு குறித்த பயிற்சி மற்றும் சரியான நோக்கு நிலையை வழங்குதல்.

- பழங்குடியினரின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்க பழங்குடியினர் அருங்காட்சியகம் பராமரித்தல்.

- பழங்குடியினரின் மேம்பாட்டிற்கான முன்னோக்கு திட்டங்களை தயார் செய்தல்.

- தமிழ்நாட்டின் பழங்குடியினர் தொடர்பான குறித்தகால ஆய்வுகளை மேற்கொள்வது.

- அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களில் மதிப்பீட்டு ஆய்வுகளை நடத்துதல்.
- பழங்குடியினர் பகுதிகளில் உள்ள அமைப்புகள், பழங்குடியினர் மேம்பாட்டுப் பிரச்சனைகள் பற்றிய கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகளை ஏற்பாடு செய்தல்.

## III. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

**"ஆதிதிராவிடரும் பழங்குடியினரும் சமூகத்தின் உட்புறம் முளைத்து வரும் வேர்களைப் போன்றவர்கள். அவர்கள் வளர்ச்சி என்பது நாட்டின் முழுமையான முன்னேற்றத்திற்கான அடிப்படையாகும். சமத்துவம் எங்கும் நிலைநிறுத்தப்படும் வரை, நமது சுதந்திரமும், நமது முன்னேற்றமும் முழுமை அடையாது"**

என்ற முத்தமிழறிஞர் கலைஞரின் கூற்றின்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை அனைத்து நிலைகளிலும் முன்னேற்றத்தினை அடைந்திடும் பொருட்டு, சமுக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், தொழில் முனைவு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்குதல், பள்ளி மற்றும் விடுதி கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை

மேற்கொள்ள, 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்டது.

இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் மாநில அரசால் 51 விழுக்காடும், ஒன்றிய அரசால் 49 விழுக்காடும் என்ற விகிதத்தில் 1980-ஆம் ஆண்டிலிருந்து பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இக்கழகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.200.00 கோடியும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.147.11 கோடியும் உள்ளது.

### 1. வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கான முன்னெடுப்புகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்த மானியத்துடன் கூடிய பொருளாதார மேம்பாட்டு மற்றும் தொழில் முனைவோர் திட்டங்களை வங்கிகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடனும், தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (National Scheduled Castes Finance and Development Corporation - NSFDC), தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (National Scheduled Tribes Finance and Development Corporation - NSTFDC), தேசிய தூய்மைப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (National Safai Karamcharis Finance & Development Corporation - NSKFDC) மூலம் குறைந்த வட்டியில் கடன் பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### 1.1 முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் (CM - ARISE)

வாழ்வாதார உயர்வு, திறன் மேம்பாடு மற்றும் நீடித்த முன்னேற்றம் ஆகியவற்றினை

உறுதி செய்யும் வகையில் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீட்டில் 35 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகையை முன் விடுவிப்பு மானியமாக வங்கி வழியாக வழங்கப்படுகிறது. மேலும் வங்கியில் கடன் தவணையை தவறாமல் திரும்ப செலுத்தும் பயனாளிகளுக்கு 6% வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பயனடைய குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3.00 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் துவங்கப்பட்டு (2023-2024) கடந்த இரண்டு ஆண்டுகளில் 4688 பயனாளிகளுக்கு ரூ.89.74 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் பல்வேறு தொழில் முனைவு திட்டங்களை தேர்வு செய்து பயனடைந்துள்ளனர். குறிப்பாக 29 சதவீதம் கனரக மற்றும் இலகுரக வாகனங்கள், 7 சதவீதம் சிறு வணிக கடைகள், 6 சதவீதம் ஆடையகம், 6 சதவீதம் சென்ட்ரிங் தொழில்கள் வாயிலாக பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கு, 2025-26-ஆம் நிதியாண்டில் ரூ.75.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.2 பிரதமரின் ஆதிதிராவிடர்களுக்கான முன்னேற்ற திட்டம் (Pradhan Mantri Anusuchit Jaati Abhyuday Yojana (PM-AJAY)

ஆதிதிராவிட மக்களுக்கு ஒன்றிய அரசு நிதியுதவியுடன் Pradhan Mantri Anusuchit Jaati Abhyuday Yojana திட்டத்தின் கீழ் வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்கள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள், அடிப்படை வசதிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தனிநபருக்கான திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.50,000/- இதில் எது குறைவானதோ அத்தொகையை வருவாய் ஈட்டும் தொழில்கள் புரிந்திட வங்கிகள் மூலம் முன் விடுவிப்பு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் கிராம பகுதிகளில் வாழும் ஆதிதிராவிட மக்கள் கீழ்க்கண்ட தொழில்களில் ஈடுபட்டு பயனடைந்து வருகின்றனர்.

- கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, கோழிப் பண்ணை மற்றும் ஆடு வளர்ப்பு.
- மீன் வளர்ப்பு, மீன்பிடி படகு மற்றும் வலை வாங்குதல்.
- பல்பொருள் அங்காடி, எழுதுபொருள் விற்பனை, உடற்பயிற்சிக் கூடம், அழகு நிலையம் மற்றும் வெதுப்பகம் அமைத்தல்.

இத்திட்டத்தின் கீழ், 2024-2025-ஆம் நிதியாண்டில் 10,740 பயனாளிகளுக்கு ரூ.52.62 கோடி மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களில் வங்கிகள் விரைவாக பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்குவதை துரிதப்படுத்தவும், சொத்து உருவாக்கத்தை உறுதி செய்வதற்கும், ஓய்வு பெற்ற வங்கி

அலுவலர்களை கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. தாட்கோ இணையதளத்தில் மானியத்துடன் கூடிய கடன் பெற விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதற்கு மாவட்ட மேலாளரை தலைவராகவும், மண்டல திட்ட அலுவலரை (வங்கி மேலாளர்) உறுப்பினராகவும், தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களால் பரிந்துரைக்கப்படும் பிரதிநிதியை உறுப்பினராகவும் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

### 1.3 தேசிய நிதி நிறுவனங்கள் வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்கள்

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகமானது மாநில முகமையாக செயல்பட்டு பின்வரும் ஒன்றிய அரசின் நிதி மேம்பாட்டு கழகங்களிடமிருந்து

குறைந்த வட்டியில் கடன் பெற்று பல்வேறு காலமுறைக்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

1. தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSFDC),
2. தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டு கழகம் (NSTFDC),
3. தேசிய தூய்மைப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSKFDC)

### 1.3.1 நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கு கடன் உதவி

தேசிய தூய்மைப் பணியாளர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSKFDC) வாயிலாக 59 உள்ளாட்சி அமைப்புகளில் நிரந்தர பணியாளர்களாக பணிபுரியும் 651 தூய்மைப் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ரூ.11.77 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகையை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அவர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்து தாட்கோ வாயிலாக NSKFDC கழகத்திற்கு திரும்ப செலுத்தப்பட்டு வருகிறது.

### 1.3.2 சிறு, குறு வணிக கடன்

சிறு, குறு வணிகர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு ஒன்றிய அரசின் நிதி நிறுவனங்களாகிய தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSFDC), தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (NSTFDC), தேசிய தூய்மைப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSKFDC) மூலம் அதிகபட்சமாக 4 சதவீத குறைந்த வட்டியில் சிறு வணிக கடன் (Micro Credit Finance) உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயனாளிகளின் வாழ்வாதார தொழில் முனைவுக்கு மட்டும் தகுதியின் அடிப்படையில் CM-ARISE மற்றும் PM-AJAY–இன் கீழ்

வழங்கப்படும் மானியத்துடன் இணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், கடன் பெற தகுதி மற்றும் விருப்பம் உள்ள பயனாளிகளை சங்கங்களாக பதிவு செய்து உறுப்பினர்களாக்கப்படுவர். தேவைப்படும் நிதியை தாட்கோ தேசிய நிதி மேம்பாட்டுக் கழகங்களிடமிருந்து குறைந்த வட்டியில் பெற்று, வங்கிகள் மற்றும் குழுக்கள் வாயிலாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்திட தாட்கோ, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியுடன் (TNSCB) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளதுபோல் TNSCB அனைத்து DCC வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

சென்னை கோயம்பேடு வணிக சந்தையில் வியாபாரம் செய்த 200 ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியின வணிகர்களை ஒருங்கிணைத்து ஜெய் பீம் தொழிலாளர்கள் மற்றும் சிறு வணிகர்கள் நலச் சங்கம் உருவாக்கப்பட்டு ரூ.94.00 இலட்சம் மானியத்துடன் ரூ.4.71 கோடி சிறுவணிக கடனாக வழங்கப்பட்டுள்ளது. இக்கடன், இதுநாள் வரை தவணைகளை முறையாக திரும்ப செலுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதை தொடர்ந்து, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இச்சிறு, குறு கடன் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### 1.3.3 கல்விக் கடன்

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு பட்டப்படிப்பு பயில்வதற்காக NSFDC, NSTFDC, NSKFDC போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து குறைந்த வட்டியில் கடன் பெற்று மாணாக்கர்களுக்கு கல்வி கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம், 2024-2025-ஆம் நிதியாண்டில் 152 மாணாக்கருக்கு ரூ.525.00 இலட்சம் கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 1.4 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சுய உதவிக் குழுக்களுக்கு வாழ்வாதார முன்னேற்ற முன்னெடுப்புகள்

### அ) மாணாக்கருக்கு சீருடை தைத்து வழங்குதல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலப் பள்ளி மற்றும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி மற்றும் விடுதிகளில் தங்கிப் பயிலும் 70,000 மாணாக்கருக்கு 2.75 இலட்சம் சீருடைகள், தாட்கோ வாயிலாக தையல் பயிற்சி பெற்ற சுயஉதவிக் குழு மற்றும் உறுப்பினர்கள் மூலமாக நேர்த்தியாக தைத்து வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில், 1300 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தையற்கூலியாக ஆண்டுதோறும் ரூ. 6.50 கோடி வழங்கப்படுகிறது. இதன் மூலம், கிராமப் புறங்களில் வாழும்

ஏழை, எளிய மகளிர்கள் கூடுதல் வருமானம் பெற்று வருகின்றனர்.

மாணாக்கருக்கு கல்வி ஆண்டு துவக்கத்திலேயே நேர்த்தியாக தைக்கப்பட்ட சீருடைகள் வழங்கப்படுகிறது.

**ஆ) பொலிவு ஹெல்த் கேர் சொசைட்டி**

60 ஆதிதிராவிடர் மகளிரைக் கொண்ட ஐந்து மகளிர் குழுக்கள் மூலம் பொலிவு ஹெல்த் கேர் சொசைட்டி துவங்கப்பட்டு, சோப்பு, தேங்காய் எண்ணெய் ஷாம்பு மற்றும் சலவைத்தூள் போன்ற பொருட்களை தயார் செய்து தமிழ்நாடு முழுவதும் இயங்கி வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதியில் தங்கிப் பயிலும் சுமார் 20,000 மாணாக்கருக்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் சுயஉதவிக் குழுக்கள் ஆண்டொன்றுக்கு ரூ.3.00 கோடி மதிப்பிலான பொருட்கள் உற்பத்தி செய்து ரூ 18.00 இலட்சம்

வரை வருமானம் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**இ) சமுதாயக்கூடங்கள் பராமரித்தல்**

புதியதாக கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ள 27 சமுதாயக்-கூடங்களை ஒரு சமுதாயக்கூடத்திற்கு 5 நபர்கள் கொண்ட மகளிர் வாழ்வாதாரக் குழு அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இக்குழுக்களுக்கு NSFD கழகத்தின் வாயிலாக ஒரு சமுதாய கூடத்திற்கு ரூ.2.50 இலட்சம் கடன் மற்றும் ஒன்றிய அரசின் PM-AJAY திட்டத்துடன் இணைத்து ரூ.2.50 இலட்சம் மானியத்துடன் சமுதாயக் கூடத்திற்கு தேவையான தளவாடப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. பயனாளிகளிடமிருந்து இக்குழுக்கள் மிகக்குறைந்த உபயோகக் கட்டணம் பெற்று பராமரித்து வருகின்றனர்.

இனிவரும் காலங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக கட்டப்படும் அனைத்து சமுதாயக் கூடங்களும் இதுபோல் பராமரிப்பு செய்ய வழிவகை செய்யப்படும். இதனால் சமுதாயக் கூடங்களை நீண்டநாள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதுடன் அப்பகுதியில் வாழும் மகளிருக்கு கூடுதல் வருமானம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ஈ) ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி மாணக்கர்களுக்கு உணவு தயாரித்தல்**

எட்டு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கருக்கு உணவு தயாரித்து வழங்க, அப்பகுதியில் வசிக்கும் பழங்குடியின மகளிரைக் கொண்ட சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு ஒரு வார காலத்திற்கு சென்னை தரமணியில் அமைந்துள்ள Institute of Hotel Management-இல்

பயிற்சி அளிக்கப்பட்டு, மாணாக்கருக்கு தரமான உணவு வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்குப் பிறகு இக்குழுக்களுக்கு தேவையான நவீன சமையல் உபகரணங்கள் ஒரு விடுதிக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் பழங்குடியினர் நலத்துறையின் வாயிலாக பெற்று வழங்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக 2,400 மாணாக்கருக்கு தரமான உணவு வழங்கப்படுவதுடன் 40 சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஊதியமாக மாதம் குறைந்தது ரூ.25,000/- மற்றும் ஈவுத்தொகை பெற்று வருகின்றனர்.

### 1.5 நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம்

விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிரை நில உடமையாளர்களாக உயர்த்தி சமூக நிலை மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும்

நோக்கில் நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிர் பிற இனத்தவர்களிடமிருந்து விவசாய நிலத்தை கிரையம் பெற்று தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது.

கிரையம் செய்யப்படும் நிலங்களுக்கு சந்தை மதிப்பில் 50 விழுக்காடு அல்லது அதிகப்பட்சம் ரூ.5.00 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது

மேலும், கிரையம் பெறும் நிலங்களுக்கு முத்திரைத் தாள் மற்றும் பதிவு கட்டணம் செலுத்துவதிலிருந்து அரசால் முழுவிலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

பயனாளிகளின் பங்களிப்பு தொகையினை செலுத்த இயலாத ஏழை எளிய மகளிர்களுக்கு 50 சதவீத பயனாளிகளின் பங்களிப்பு தொகையினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (IOB) மூலம் குறைந்த வட்டியில் கடன் பெற்றிட தாட்கோ இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்யப்பட்டு கடன் வழங்கப்பட்டு வருகிறது.

2024–2025-ஆம் நிதியாண்டில் 408 பயனாளிகளுக்கு ரூ.19.99 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2025–2026-ஆம் நிதியாண்டில் ரூ. 20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2. திறன் மேம்பாட்டு பயிற்சி

"மாறிவரும் உலக பொருளாதார சூழ்நிலையில், வேலைவாய்ப்பினை பெற்றுத்தரும் மைய விசையாக கல்வியோடு கூடிய திறன் மேம்பாடு உள்ளது" என்ற உலக வங்கியின் கணிப்பை கருத்தில் கொண்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள், இளைஞர்கள் மற்றும் போட்டித் தேர்வர்கள், வேலைவாய்ப்பினை பெறுவதற்கான புதிய தொழில்நுட்பங்களை கற்றுக்கொள்ளவும், திறன்களை மேம்படுத்திக்கொள்ளவும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

- 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பட்டதாரிகள் வேலைவாய்ப்பு / போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்காக சிறப்புப் பயிற்சிகள் ரூ.1.00 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

- 5,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு தொழில் மேலாண்மை பயிற்சிகள் ரூ.2.00 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

**2.1 மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் UPSC - 2025 தேர்வுக்கு (Prelims- cum-Mains) பயிற்சி அளித்தல்**

சென்னையில் உள்ள முன்னணி பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து இளங்கலை / முதுகலை பட்டப்படிப்பு முடித்த 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்பெறும் தேர்வுக்கு General Studies & Optional (Prelims- cum-Mains) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது-

2024-2025-ஆம் நிதியாண்டில் இப்பயிற்சிக்கு 100 மாணாக்கருக்கு ரூ.202.00 இலட்சம் செலவில் பயின்று வருகின்றனர்.

**2.2 பட்டய கணக்காளர், நிறுவன செயலாளர், செலவு மற்றும் மேலாண்மை கணக்கியல் பயிற்சி**

சென்னையில் உள்ள முன்னணி பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து இளங்கலை வணிகவியல் பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கருக்கு பட்டய கணக்காளர்- இடைநிலை (Chartered Accountant-Intermediate), நிறுவன செயலாளர்- இடைநிலை (Company Secretary- Intermediate) , செலவு மற்றும் மேலாண்மை கணக்காளர்- இடைநிலை (Cost and Management Accountant- Intermediate) ஆகிய போட்டி தேர்வுகளில் தேர்ச்சி பெற மாணாக்கருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2024-2025-ஆம் நிதியாண்டில் 43 மாணாக்கருக்கு ரூ10.87 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 2.3. இந்திய தொழில்நுட்பக் கழகம் மெட்ராஸ் (IIT-M) நிறுவனத்தில் பட்டப்படிப்பு

இளங்கலை தகவல் அறிவியல் மற்றும் பயன்பாடு (BS-Data Science and Application) மற்றும் மின்னணு அமைப்புகள் (BS- Electronic Systems) போன்ற நான்கு வருட பட்டப்படிப்பு இந்திய தொழில்நுட்பக் கழகம், மெட்ராஸ் (IIT - Madras) இல் இணைய வழியாக பயில்வதற்கான நுழைவுத் தேர்வுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, தேர்ச்சி பெறும் மாணாக்கருக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. மாணக்கர் தங்களது நேரடி பட்டப்படிப்பினை படித்துக்கொண்டு இப்படிப்பினை இணையதளம் வழியாக பயிலலாம்.

2024-2025-ஆம் நிதியாண்டில், 28 மாணாக்கருக்கு நுழைவுத் தேர்வுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, தேர்வில் தேர்ச்சி பெற்ற 24 மாணாக்கருக்கு பட்டப்படிப்பு பயில ரூ.34.55 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**2.4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி – II மற்றும் தொகுதி IIA முதல்நிலை போட்டி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பயிற்சி**

பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்பெறும் தொகுதி – II மற்றும் தொகுதி IIA முதல் நிலை போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு, முதன்மை தேர்வை எதிர்கொள்ள முன்னணி பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

2024-2025-ஆம் நிதியாண்டில் 62 இளைஞர்களுக்கு ரூ.12.88 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 2.5 NEET, JEE, CLAT நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி

மருத்துவம், பொறியியல் மற்றும் தேசிய சட்டப் பல்கலைக்கழகங்களில் சேர்க்கை பெறுவதற்கு NEET, JEE, CLAT போன்ற நுழைவுத் தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெற பன்னிரெண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 2024-2025 ஆம் நிதியாண்டில் ரூ.109.12 இலட்சம் செலவிடப்பட்டு, 350 மாணாக்கருக்கு NEET, JEE, CLAT நுழைவுத்தேர்வு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

### 2.6 பொது நுழைவுத் தேர்வு பயிற்சி (Common Admission Test - CAT )

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த மாணாக்கர்கள் இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) போன்ற கல்வி நிறுவனங்களில் முதுகலை வணிக மேலாண்மை (MBA) படிப்பிற்கான பொது நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறும் வகையில் சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலமாக 268 மாணாக்கருக்கு ரூ.31.90 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 2.7 வெளிநாடுகளில் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேருவதற்குரிய நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி (IELTS, TOEFL, GRE, GMAT)

வெளிநாடுகளில் உயர்தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து பயிலுவதற்குரிய கட்டாய தகுதித் தேர்வுகளான IELTS, TOFEL, GRE, GMAT

போன்ற தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

2024-2025 ஆம் நிதியாண்டில் ரூ.15.54 இலட்சம் செலவிடப்பட்டு 65 மாணாக்கருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**2.8. ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் தொழில்நுட்ப பட்டப்படிப்பிற்கான நிதியுதவி**

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர் சென்னை தரமணியில் உள்ள ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் இளங்கலை ஹோட்டல் நிர்வாகம் மற்றும் விருந்தோம்பல் (B.Sc – Hospitality & Hotel Administration) மூன்று வருட முழுநேர பட்டப்படிப்பு மற்றும் உணவு உற்பத்தி பட்டயப்படிப்பு பயில நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

2024-2025-ஆம் நிதியாண்டில் 37 மாணாக்கருக்கு ரூ.68.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2.9. சர்வதேச விமான போக்குவரத்து கூட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகள்**

பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு சர்வதேச விமான போக்குவரத்து கூட்டமைப்பால் (IATA - International Air Transport Association, Canada) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் விமான நிலைய பயணிகள் சேவை மற்றும் விமான பயண முன்பதிவு (Passenger Ground Services and Reservation Ticketing), விமான சரக்கு அறிமுக மற்றும் ஆபத்தான பொருட்கள் விதிமுறைகள் (Air Cargo Introductory and Dangerous Goods Regulations) மற்றும் சுற்றுலா துறையின் பயண அடிப்படை படிப்புகள்

(Foundation in Travel and Tourism) பயில பயிற்சி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் 55 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு முதற்கட்டமாக 46 நபர்கள் முன்னணி விமான நிறுவனங்கள் மற்றும் சேவை மையங்களான Indigo, Airindia, Menzies, Bird Aviation,Hyundai, iGo Tours, Wings vacation, Zenith Tours,Alhind Tours & Money Exchange போன்ற நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

2024-2025-ஆம் நிதியாண்டில், 55 மாணாக்கருக்கு ரூ.29.77 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 2.10 TCS iON நிறுவனத்தின் மூலம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அனிமேசன் பயிற்சி

இளங்கலை, முதுகலை படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு முடித்த மாணாக்கருக்கு TCS iON நிறுவனத்தின் வாயிலாக தேசிய அளவிலான தகுதித் தேர்வுக்கான (National Qualifier Test) பயிற்சி வழங்கி தேர்ச்சி பெறுவோருக்கு அனிமேசன் பயிற்சி வழங்கப்படுகிறது.

2024-2025 ஆம் நிதியாண்டில் ரூ.23.60 இலட்சம் செலவில், 100 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 2.11. TCS iON மற்றும் அப்பல்லோ மெட்ஸ்கில்ஸ் நிறுவனத்தின் மூலம் செவிலியர் திறன் பயிற்சி

செவிலியர் பட்டப்படிப்பு அல்லது பட்டயப் படிப்பு முடித்த மாணாக்கருக்கு இணைய வழி

செவிலியர் திறன் பயிற்சி வழங்கப்பட்டு முன்னணி மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கான தகுதி உறுதிசெய்யப்படுகிறது.

2024-2025 ஆம் நிதியாண்டில் ரூ.105.26 இலட்சம் செலவில், 378 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

### 2.12 கடைசல் இயந்திரம் இயக்கும் பயிற்சி (CNC Operator Traning)

பத்தாம் வகுப்பு முடித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு கடைசல் இயந்திரம் இயக்கும் பயிற்சி அளித்து பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

2024-25-ஆம் நிதியாண்டில் ரூ.48.79 இலட்சம் செலவில் 34 மாணாக்கருக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

### 2.13 தளவாடங்கள் மற்றும் விநியோக சங்கிலி துறை (Logistics and Supply Chain Sector) கிடங்கு மேலாண்மை (Warehouse Management), கிடங்கு பிக்கர் மற்றும் பேக்கர் (Warehouse Picker & Packer) பயிற்சிகள்

பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு முடித்த மாணாக்கருக்கு தளவாடங்கள் மற்றும் விநியோக சங்கிலி துறை மற்றும் கிடங்கு மேலாண்மை (Warehouse Management) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

10, 12ஆம் வகுப்பு மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகளில் (ITI) தேர்ச்சி பெற்ற மாணாக்கருக்கு கிடங்கு பிக்கர் மற்றும் பேக்கர் (Warehouse Picker & Packer) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது

2024-2025- ஆம் நிதியாண்டில் 33 மாணாக்கருக்கு ரூ.7.26 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது

### 2.14. ஆளில்லா வானூர்தி (Drone) இயக்கப் பயிற்சி

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ட்ரோன் நிபுணத்துவம் பெறவும், விவசாய நிலங்களில் பூச்சிக்கொல்லிகள் தெளிப்பதற்காக சொந்தமாக ஆளில்லா வான்வழி வாகனம் வாங்கி இயக்கவும் மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் விண்வெளி ஆராய்ச்சி மையம் மூலம் ஆளில்லா வான்வழி வாகனம் இயக்கப் பயிற்சி வழங்கப்படுகிறது.

2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.31.90 இலட்சம் செலவில் 53 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (Directorate General of Civil Aviation) மூலம் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.15 மருத்துவக் குறியீடு (Medical Coding) பயிற்சி

இளங்கலை மற்றும் முதுகலை அறிவியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கருக்கு மருத்துவக் குறியீடு (Medical Coding)க்கான பயிற்சி அளிக்கப்பட்டு இந்திய மென்பொருள் நிறுவனங்களில் மருத்துவ குறியீட்டுக்கான வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

2024-2025-ஆம் நிதியாண்டில், 55 மாணாக்கருக்கு ரூ.8.25 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 2.16 ஆடை அலங்கார பயிற்சி (Fashion Designing)

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த மாணாக்கருக்கு பல்வேறு ஆடை அலங்கார நிலையங்களில் வேலைவாய்ப்பு பெறவும், சொந்தமாக ஆடை அலங்கார நிலையம் அமைப்பதற்கும் பயிற்சி வழங்கப்பட்டு, வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படுகிறது.

2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.15.45 இலட்சம் செலவில் 30 மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**2.17 செயற்கை இயந்திரவியல் பயிற்சி (Artificial Robotics Training)**

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த மாணாக்கருக் செயற்கை இயந்திரவியல் பயிற்சி வழங்கப்பட்டு, சிறந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.18.00 இலட்சம் செலவில் 30 மாணாக்கருக் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**3. தொழிற்பேட்டைகள் புனரமைப்பு**

ஆதிதிராவிடர் தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும், அதன் மூலம் வேலைவாய்ப்பு அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை

உயர்த்தும் பொருட்டு, ஈங்கூர் மற்றும் முதலிப்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள அரசு தொழிற்பேட்டைகளை ரூ.50.00 கோடி மதிப்பில் புதிய உட்கட்டமைப்புடன் புனரமைக்கப்பட்டு வருகிறது.

### 4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோர் சிறப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கவும், புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்-களுக்கான தொழில் முனைவோர் சிறப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடத்தப்படுகிறது.

இரண்டவாது முறையாக, இக்கருத்தரங்கம் சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில்

2025ஆம் ஆண்டு, ஜனவரி 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 15,000-க்கும் மேற்பட்ட பொருட்களானது 300 அரங்கங்களிலும், வணிக நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்தி பொருட்கள் 200 அரங்குகளிலும், அரசு பொதுத்துறையைச் சார்ந்த 30 அரங்குகளும், தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள் 15 அரங்குகளும் அமைக்கப்பட்டு, சுமார் முப்பதாயிரம் பார்வையாளர்கள் பார்வையிட்டனர்.

5. ஆதிகலைக்கோல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் தொன்மையான கலைகள், பண்பாடு, இலக்கியம், இசை, நடனம் ஆகிய கலை வடிவங்களை பாதுகாக்கவும், காட்சிப்படுத்தவும் ஆதிகலைக்கோல் என்னும் நிகழ்வு தமிழகத்தில் முதல்முறையாக 2024ஆம் ஆண்டு

டிசம்பர் 2 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடத்தப்பெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கை முறையை பிரதிபலிக்கும் வகையில் 300 புகைப்படங்கள், 100க்கும் மேற்பட்ட ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 1000க்கும் மேற்பட்ட நூல்கள், 800க்கும் மேற்பட்ட பாரம்பரிய இசைக்கருவிகள் ஆதிதிராவிடர் பண்பாட்டினை பிரதிபலிக்கும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டன.

### 6. கட்டுமானப் பிரிவு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணாக்கருக்கான விடுதிகள், பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல், குடியிருப்புகளில் சமுதாயக்கூடம், கிராம அறிவுசார் மையங்கள், பல்நோக்கு மையம், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும்

பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2024-2025- ஆம் நிதியாண்டின் பணிகள் விவரம்

| திட்டம் | கூறுகள் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| மாநில திட்டம் (ஆதிந) | விடுதிகள், பள்ளிகள், சமுதாயக்கூடம் மற்றும் அடிப்படை வசதி எற்படுத்துதல் | 595 | 515.43 |
| மாநிலத் திட்டம் பழங்குடியினர் நலம் | விடுதிகள், பள்ளிகள், சமுதாயக்கூடம் மற்றும் அடிப்படை வசதி எற்படுத்துதல் | 132 | 136.31 |
| நபார்டு | விடுதிகள் மற்றும் பள்ளிகள் | 250 | 329.38 |
| பழங்குடியினர் நலம் | வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு | 2356 | 135.65 |
| PM-AJAY, BJRCY, EMRS, PM-JANMAN | விடுதிகள், பல்நோக்கு மையங்கள், பள்ளிகள் பராமரிப்பு பணிகள் | 203 | 94.01 |
| **மொத்தம்** | | **3536** | **1210.77** |

## 6.1 மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதிதிராவிடர் நல மற்றும் பழங்குடியினர் நல பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், விடுதிகள், சமுதாயக் கூடங்கள் கட்டுதல், விடுதிகள் பழுது பார்க்கும் பணி, மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித்திட்டத்தின் (State Balanced Growth Fund) கீழ் கல்வராயன் மலையில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நவீன விடுதிகள் கட்டுமான பணிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் போன்ற 727 பணிகள் மாநில அரசின் நிதியுதவியின் கீழ் ரூ. 651.74 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பழங்குடியினருக்காக 2356 வீடுகள்

ரூ.135.65 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன.

### 6.2 நபார்டு திட்டப் பணிகள் (ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி)

நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள், பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் கிராம அறிவுசார் மையம் போன்ற பணிகள் ரூ.329.38 கோடி மதிப்பீட்டிலான 250 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## IV. தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்

தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அவர்களது பிரச்சனைகளுக்கு தீர்வு அளித்தல் போன்ற பணிகளுக்காக தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் அமைப்பாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் உருவாக்கப்பட்டு 13.10.2021 முதல் செயல்பட்டு வருகிறது.

சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் இவ்வாணையம் செயல்படுகிறது. இந்த ஆணையத்திற்கு ஒரு துணைத் தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர். இவர்களது பதவிக்காலம் மூன்று ஆண்டுகள்

ஆகும். மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் உறுப்பினர் செயலராக உள்ளார்.

இவ்வாணையத்தில், 31.03.2025 வரையில், 5450 மனுக்கள் பெறப்பட்டதில், 4074 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

## V. நலக் குழுக்கள்

### தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின், ஐந்தாவது அட்டவணையில் விதி எண்.4(1)-இல் வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி, தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினரின் நலன் மற்றும் அவர்களது முன்னேற்றத்திற்கு தேவையான ஆலோசனை வழங்கும் விதமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் 04.09.1961 அன்று உருவாக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களை தலைவராகவும் 3 அலுவல் சார் உறுப்பினர்கள், 2 பழங்குடியினத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்கள் (பழங்குடியினர்) மற்றும்

2 பழங்குடியினர் அல்லாத அலுவல் சாரா உறுப்பினர்களை கொண்டு 30.11.2023 இல் இம்மன்றம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் நல இயக்குநர் இம்மன்றத்தின் உறுப்பினர்-செயலர் ஆவார்.

## VI. நல வாரியங்கள்

### 1. தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்

புதிரை வண்ணார் சமுதாயத்தின் சமூக, பொருளாதார கல்வி மேம்பாட்டிற்காகவும் உரிய நலத்திட்டங்கள் வழங்கவும் புதிரை வண்ணார் நல வாரியம் 15.10.2009 அன்று அமைக்கப்பட்டது.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு 13 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் இவ்வாரியத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆதிதிராவிடர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலர் ஆவார். இவ்வாரியம் 03.08.2023 அன்று மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தின் மறுசீரமைப்பிற்காகவும், மக்களின் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்

2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.10.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

புதிரை வண்ணார் மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு திட்டங்கள் தீட்ட ஏதுவாக கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், அவர்களுக்கான வாழ்வாதார திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

**2. தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்**

தூய்மைப் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து, உறுப்பினர்களின் முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காக 11.06.2007 அன்று இவ்வாரியம் உருவாக்கப்பட்டது.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், ஒரு துணைத் தலைவர், 14 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 12 அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு இவ்வாரியம் 03.05.2023 அன்று திருத்தி அமைக்கப்பட்டது. தாட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலாளர் ஆவார்.

இவ்வாரியத்தில் 3.25 இலட்சம் உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர். இதுவரையில் 9,969 உறுப்பினர்களுக்கு ரூ.11.76 கோடி மதிப்பில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**முன்னெடுப்புகள்**

2022-2023-ஆம் நிதியாண்டில் 6-வது மாநில நிதி குழுவின் (6th State Finance Commission) மூலம்

தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு ரூ.20.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை ஆண்டுதோறும் நலவாரியத்திற்கு விடுவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2022-2023-ஆம் நிதியாண்டில் 3,078 உறுப்பினர்களைக் கொண்ட 13 மகாத்மா காந்தி தொழிலாளர் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுகாதார அங்காடிகள் அமைப்பதற்கு ரூ.98.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 மற்றும் 2023–2024 நிதியாண்டுகளில், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வீடற்ற உறுப்பினர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் ரூ.110.00 கோடி மதிப்பீட்டில் 1000 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் பயனாளிகளின் பங்களிப்பில்

90 விழுக்காடு வாரியத்தின் நிதியிலிருந்தும் 10 விழுக்காடு பயனாளிகளின் பங்களிப்பாக பெற்று வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டிலிருந்து தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த திருமணம், கல்வி, இயற்கை மரணம், விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகைகள் மற்றும் முதியோர் ஓய்வூதிய உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் அனைத்தும், இதர நல வாரியங்களில் வழங்கப்பட்டு வரும் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

“நான் முதல்வன்” திட்டத்தின் கீழ், தூய்மை பணியாளர்களின் குழந்தைகளது கற்றல் திறனை மேம்படுத்த ஏதுவாக, 8, 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் நலன் கருதி

ஒரு முன்னோடி திட்டமாக (Pilot Project) உறைவிடத் திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் (Residential Skill Development Training Centre) ஒன்று, நல வாரியம் மூலம் திருநெல்வேலியில் துவங்கப்பட்டு, கடந்த 06.10.2022 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 48 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றார்கள்.

### 3. தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்

தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியின மக்களின் கல்வி, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான உதவிகளை பெற்று வழங்குவதற்காக தமிழ்நாடு பழங்குடியினர் நலவாரியம் 20.04.2007 அன்று உருவாக்கப்பட்டது.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள், 14 பழங்குடியின

அலுவல் சாரா உறுப்பினர்கள் (2 சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட) மற்றும் 3 பழங்குடியினர் அல்லாத அலுவல்சாரா உறுப்பினர்களை கொண்டு 08.09.2023-இல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலாளர் ஆவார்.

இவ்வாரியம் மூலம் கல்வி, திருமணம், ஓய்வூதியம், இயற்கை மரணம் மற்றும் விபத்து மரணம் ஆகியவற்றிற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியத்தில் 52,790 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர்.

### 4. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

நரிக்குறவர் இன மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், அவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைவதற்கும், நலத்திட்ட உதவிகளை திறம்பட செயல்படுத்துவதற்கும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் 27.05.2008 அன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம், 23.08.2023 அன்று முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களை தலைவராகவும் 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள், 13 அலுவல்சாரா உறுப்பினர்களை கொண்டு 30.10.2023 அன்று திருத்தியமைக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர்

நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலாளர் ஆவார்.

தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் தற்போது 16,010 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர்.

## VII. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2025-2026-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூ. கோடியில்)

| வ. எண். | அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை - தலைமைச் செயலகம் | 14.89 | - | 1.00 | 15.89 |
| 2. | ஆதிதிராவிடர் நலத்துறை | 2642.21 | 589.71 | - | 3231.92 |
| 3. | பழங்குடியினர் நலத்துறை | 384.33 | 285.41 | - | 669.74 |
| 4. | தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் | 6.57 | - | - | 6.57 |
| | மொத்தம் | 3048.00 | 875.12 | 1.00 | 3924.12 |

**மருத்துவர் மா. மதிவேந்தன்**
**ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்**



எம்.சி.இராஜா கல்லூரி மாணவர் நவீன விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமத்துவ நாளன்று (14.04.2025) திறந்து வைத்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமத்துவ நாள் சிறப்பு விருந்தினர் திரு.பிரகாஷ் அம்பேத்கர் அவர்களுக்கு "இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முகவுரையை" நினைவுப் பரிசாக வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமத்துவ நாள் விழாவில் (14.04.2025) தாட்கோ மூலம் கட்டடப்பட்ட பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார்.





நாடாளுமன்ற உறுப்பினர் திரு.து.ரவிக்குமார் அவர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான அண்ணல் அம்பேத்கர் விருதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் பெற்றுக்கொண்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காரைக்குடி அரசு ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவியர் விடுதிக்கு நேரில் சென்று, மாணவிகளிடம் கலந்துரையாடினார்.



மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 29.03.2025 அன்று நடைபெற்றது.




சமத்துவ நாள் (14.04.2025) விழாவின் போது, வன உரிமைச் சட்டம், 2006 ன் கீழ் வன உரிமை வழங்குவதற்கு சாத்தியமுள்ள பகுதிகளை கொண்ட வரைபடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.




விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்று முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்ற பழங்குடியின இளைஞர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நியமன ஆணை வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தில் வெளிநாடு சென்று பயில உள்ள மாணாக்கர்




மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் CM–ARISE பயனாளிகளுக்கு நான்கு சக்கர வாகனத்தினை வழங்கினார்.




ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் பொருட்டு கண்காட்சி மற்றும் கருத்தரங்கு TN–BEAT EXPO 2025 மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தொடங்கி வைத்தனர்.




TN–BEAT EXPO 2025 மற்றும் ஆதி கலைக்கோல் 2024 சென்னையில் நடத்தப்பட்டது





மாநில அளவிலான சமத்துவம் காண்போம் விழிப்புணர்வு பயிற்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் விதிகளை பற்றிய கையேட்டினை வெளியிட்டார்.




தமிழகத்தில் முதன்முறையாக பழங்குடியினரின் கலாச்சாரத்தை பாதுகாத்தல் மற்றும் வளப்படுத்துதல் எனும் தேசிய கருத்தரங்கம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்பட்டது




தொல்குடி புத்தாய்வு திட்டத்தின் கீழ் பழங்குடியினர் வாழ்வியல் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் மாணக்கருக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார்.




அனைத்து பழங்குடியினர் நல பள்ளிகளிலும் தொல்குடியினர் தினம் கொண்டாடப்பட்டது.




24.03.2025 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் கள ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நலனுக்காக தாட்கோ மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள உட்கட்டமைப்பு பணிகள்












அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள்




ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளி மாணக்கரின் தேர்ச்சி விகிதம்

## முதலமைச்சரின் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் வர்த்தக வாரியாக – 2024 - 25




| தொழில் பெயர் | பயனாளி | மானியம் (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|
| சுற்றுலா வாகனம் | 776 | 2,453.95 |
| கால்நடை வளர்ப்பு | 566 | 317.81 |
| சில்லறை விற்பனை | 424 | 699.42 |
| ஆட்டோ பயணிகள் | 341 | 421.24 |
| ஆடைகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 240 | 423.87 |
| கட்டுமானப் பொருட்கள் | 155 | 377.88 |
| கேட்டரிங், பட்டறை மற்றும் சேவைகள் | 127 | 305.79 |

CM ARISE திட்டத்தின் கீழ் 2024–2025ஆம் ஆண்டின் தொழில் வாரியான பயனாளிகளின் விவரம்

# PM-AJAY வர்த்தக வாரியாக – 2024-25



| தொழில் பெயர் | பயனாளி | மானியம் (ரூ. கோடி ) |
|---|---|---|
| மாடு வளர்ப்பு | 9293 | 45.48 |
| ஆடு, செம்மறி ஆடு மற்றும் கோழி வளர்ப்பு | 605 | 2.96 |
| உற்பத்தி, விவசாயம் மற்றும் பிற | 247 | 1.21 |
| உற்பத்தி கரி, பெட்டி, பட்டுச் சேலை, குடிசை சோப்புத் தொழில் மற்றும் பிற | 226 | 1.12 |
| மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 224 | 1.12 |
| பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை நிலையம் | 145 | 0.75 |

PM–AJAY திட்டத்தின் கீழ் 2024–2025ஆம் ஆண்டின் தொழில்வாரியான பயனாளிகளின் விவரம்



launch policy framework to safeguard languages of tribals in TN

Transformative initiatives for marginalised communities

Housing Development Corporation (TAHDCO) will train 100 Adi Dravidar aspirants for competitive examination for Chartered Accountant - Intermediate, and Cost and Management Accountant - Intermediate, with the support of a Chennai-based training institute, according to Karur Collector M. Thangavel.

In a release, he said the candidates should be Adi Dravidar and Scheduled Tribes, and pos-

Expo boosts tribal entrepreneurship and innovation

மாணவர் நலன் சார்ந்த முன்னோடி திட்டங்கள்

Long way to go in building an egalitarian society: Tamil Nadu CM at Ambedkar Jayanti event

கல்வராயன்மலையில் 2244 பேருக்கு ₹7.51 கோடி நலத்திட்ட உதவி

FROM SOOTHSAYERS TO ENGINEERS

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செய்தித்தாள் மற்றும் ஊடக செய்திகளின் தொகுப்பு

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.